Registered as a news paper.

பக்கங்கள் பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

LIBRARY

FedEx Express

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

பொறுங்கள் உலகின் எப்பாகத்திற்கும்

விரைவாக பொதிகள், கடிதங்களை

அனுப்பிட நீங்கள் நாட வேண்டிய

ஒரே ஸ்தாபனம்

THIRUMURUGAN COM NET

Opposite Diolag phone shop
259, கே. கே. எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax: 021 222 7836 E.mail: thirumurugan5@lycosmail.com

பலநோக்கு கூ. ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7
Fax: 021 222 7

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 22 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 22 (08.10.2004) வெள்ளிக்கிழமை இதழ்: 08

# வாக்களிப்புக்கு அடையாள அட்டை கட்டாயம்; தமிழரின் வாக்குரிமையை பறிக்கும் செயல்!

## வெலிக்கந்தைப் பகுதியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

பொலநறுவ மாவட்டம் வெலிக்கந்தைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினமிரவும் குடும்பஸ்தர் ஒருவர் இராணுவ சீருடை அணிந்த இன்ந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

முத்துக்கல் கிராமத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் தர்மலிங்கம் சத்தியலிங்கம் (வயது - 37) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவ தினம் இரவு 9.00 மணியளவில் இவரது வீட்டுக்குச் சென்ற இராணுவ சீருடை தரித்த 6 பேர் இவரை வெளியே அழைத்துச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரா.சம்பந்தன் கண்டனம் தெரிவிப்பு

(கொழும்பு)

**தேர்தல் வாக்களிப்பின்போது அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பதை கட்டாயமாக்கும் சட்டமூலம் தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பறிக்கும் நோக்கிலேயே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கண்டனம் தெரிவித்தார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தே வாக்களிக்க முடியும் என்ற பிரேரணை நிறைவேற்றப்பட்டமை குறித்து கருத்து வெளியிட்டபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது -

நாட்டிலுள்ள மக்களில் - 40 லட்சம் வரையிலான மக்கள் அடையாள அட்டை பெறாதுள்ளனர். பிரஜாவுரிமை சம்பந்தமான பிரச்சினை, இடம்பெயர்வுகள் போன்ற காரணங்களாலும், வடக்கு கிழக்கில் நடைபெற்ற போரினாலும், பலர் அடையாளஅட்டை இன்றி வாழ்கின்றனர்.

விசேடமாக அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாழும் பலர் அடையாள அட்டை பெறாமலே வாழ்ந்து வருகின்றனர்.

நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையை சூழவுள்ள முகாம்களை ஒருபோதும் பின்நகர்த்த மாட்டோம்

### கடற்புலிகளின் பிராந்திய தாக்குதல் கட்டளைத் தளபதி

(திருகோணமலை)

திருமலைத் துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதியில் ஏற்கனவே எம்மால் அமைக்கப்

எமது தலைவருடைய 30 வருடகால போரியல் அனுபவமும் அரசியல் அனுபவமும் - வரலாற்றில் சகல இராணுவ

## தேர்தலுக்கு அடையாள அட்டை சட்டமூலம் நிறைவேறியது!

(கொழும்பு)

தேர்தல் வாக்களிப்பின்போது தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் - ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இருந்தபோதிலும், இந்த வாக்கெடுப்பில்

வாக்குகளை அளிக்கும்போது அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயம் ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 192 நாடாளுமன்ற

(12 ஆம் பக்கம் பார்க்க) அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது - போரினாலும், பலர் அடையாளஅட்டை இன்றி (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையை சூழவுள்ள முகாம்களை ஒருபோதும் பின்நகர்த்த மாட்டோம்

## கடற்புலிகளின் பிராந்திய தாக்குதல் கட்டளைத் தளபதி

(திருகோணமலை)

திருமலைத் துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதியில் ஏற்கனவே எம்மால் அமைக்கப்பட்ட காவலரண்களையும், முகாம்களையும் நாங்கள் ஒருபோதும், அகற்றவோ - பின்நகர்த்தவோமாட்டோம்.

இவ்வாறு நேற்று மாலை திருமலை நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற 'அலைபாடும் பரணி' ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய கடற்புலிகளின் பிராந்திய தாக்குதல் கட்டளைத் தளபதி விநாயகம் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

திருகோணமலைத் துறைமுகத்திலுள்ள கடற்படையினரை அகற்றும்வரை தமிழர் தாயகமான திருமலை மண்ணை மீட்டெடுப்பது கடினம். ஆகவே இந்தக் கடற்படையினரை அப்புறப்படுத்துவதனூடாக எமது மண்ணை மீட்டெடுக்க முடியும்.

எமது தலைவருடைய 30 வருடகால போரியல் அனுபவமும் அரசியல் அனுபவமும் - வரலாற்றில் சகல இராணுவ வல்லுநர்களையும் தமிழீழத்தின் பால் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு வைத்துள்ளது.

1994 ஆம் ஆண்டிலிருந்து திருமலைத் துறைமுகத்தைச் சூழ நாம் முகாம்களை அமைத்துள்ளோம். இந்தத் துறைமுகத்தை தாக்கி கைப்பற்றுவது எம்மால் முடியாததல்ல.

சண்டை நடந்த காலத்தை விட தற்போதைய சமாதான காலத்திலேயே கடற்படையினர் வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து பயிற்சிகளையும், அவர்களிடமிருந்து புதிய படைக் கலங்களையும் பெற்றுப் போருக்கன தயார்ப் படுத்தலை செய்து வருகின்றனர்.

நாங்கள் போரினை எதிர்கொள்வதற்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலுக்கு அடையாள அட்டை சட்டமூலம் நிறைவேறியது!

(கொழும்பு)

தேர்தல் வாக்களிப்பின்போது தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் - ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இருந்தபோதிலும், இந்த வாக்கெடுப்பில் தமிழ்க் கூட்டமைப்பு கலந்துகொள்ளவில்லை.

குறிப்பிட்ட சட்டத்தின்படி வாக்காளர் தமது வாக்குகளை அளிக்கும்போது அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயம் ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 192 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் குழு ஒஸ்ரியாவுக்கு பயணம்

(ஜெனிவா)

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு சுவிற்சர்லாந்திலிருந்து ஒஸ்ரியாவுக்கு பயணமாகியுள்ளது.

சுவிற்சர்லாந்து நேரப்படி நேற்றிரவு எட்டு மணியளவில் அவர்கள் ஜெனீவா விமானத் தளத்திலிருந்து ஒஸ்ரியாவுக்கு புறப்பட்டுச் சென்றனர்.

ஒஸ்ரிய நாட்டில் முரண்பாடுகளை நீக்கும் அமைப்புடன் நடைபெறவுள்ள இரண்டு நாள் கருத்தரங்கில் இந்தக் குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஒஸ்ரியாவில் நடைபெறவுள்ள இந்த கருத்தரங்களை நிறைவுசெய்து கொண்ட பின்னர் அங்கிருந்து ஜேர்மனிக்கு இவர்கள் பயணமாகவுள்ளனர்.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான இந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பாக்கு நீரிணையில் பாதுகாப்புக்கு புதிதாக இஸ்ரேலிய ரோந்துப்படகு!

## இந்திய கடற்படை ஈடுபடுத்துகிறது




(ராமேஸ்வரம்)

தமிழக கடற்பகுதியில் கடற்படையின் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் இந்தியக் கடற்படைக்கு புதிதாக வழங்கப்பட்ட நவீனரக அதிவேக ரோந்துப் படகுகள் இராமேஸ்வரம் கடற்பகுதியில் ரோந்துப் பணியை ஆரம்பித்துள்ளன.

இந்தியக் கடற்பகுதியில் அந்நியர்களின் ஊடுருவலைத் தடுக்கவும் கடலோர பாதுகாப்பைப் பலப்படுத்தவும் இந்தியக் கடற்படைகது சமீபத்தில் புதிதாக 6 நவீனரக அதிவேக ரோந்துப் படகுகள் வழங்கப்பட்டன. இஸ்ரேலில தயாரிக்கப்பட்ட இந்தப் படகுகள் 25 மீற்றர் நீளமும் 60 தொன் எடை கொண்டதும் 50 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியதுமான இந்தப் படகுகள் ஆழ்கடலிலும், ஆழம் குறைவான கடற்பகுதியிலும் அதிவிரைவாகச் செல்லக்கூடிய தன்மை உடையவை. ஒருகொமாண்டர், 10 கடற்படையினர் பணியாற்றும் இந்தக் கப்பலின் மேற்தளத்தில் முன்புறமும் பின்புறமும் சிறியரக பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன.

நாட்டின் கடலோரப் பாதுகாப்புக் கருதி கடற்படைக்கு வழங்கப்பட்ட படகுகளில் இரண்டு - தமிழக கடற்பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன. இதில் ரி - 84 இலக்கப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட

# யாழ்ப்பாண இளைஞரை நீதிமன்றம் விடுவிப்பு!

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மயில்வாகனம் விஜயரட்ணம் என்ற இளைஞரே விடுவிக்கப்பட்டவராவார்.

1995 ஆம் ஆண்டு கட்டுமுறிப்பு என்ற இடத்தில் படையினர் மீது தாக்குதல்நடத்தி அவர்களின் உயிரிழப்புக்கு காரணமாக இருந்தார் என்று இவர் மீது சட்டமாஅதிபர் சார்பில் வழக்குத்தாக்குதல் செய்யப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் 2002 ஆம் ஆண்டில் இவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

எனினும் குறிப்பிட்ட இளைஞன் செய்த மேன்முறையீட்டை விசாரணைசெய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் - மேற்படி குற்றச்சாட்டை நிராகரித்து குறிப்பிட்ட இளைஞனை விடுதலை செய்தது. (01)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ ஏயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# நீதிமன்றச் செய்திகள்

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவருக்கு குற்றப்பணம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இரண்டு நபர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா குற்றப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட கோண்டாவிலைச் சேர்ந்த க.யோககுமார், உரும்பிராயைச் சேர்ந்த இ.இராசதுரை என்ற இருவரும் கோடாவை வைத்து இருந்தமைக்கும், சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தி செய்தமைக்கும், கசிப்பை உடமையாக வைத்து இருந்தமைக்கும் குற்றப்பணமாக தலா 40 ஆயிரம் விதிக்கப்பட்டது.

தர்மப்பணமாக இருபாலையில் அமைந்துள்ள கானான் சிறுவர் இல்லத்துக்கு தலா 10 ஆயிரம் ரூபா செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## களவாக மின்சாரம் பெற்றுவந்த எழுவருக்கு குற்றப்பணம் விதிப்பு!

உரும்பிராயப் பகுதியில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்றுவந்த ஏழு நபர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா குற்றப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

உரும்பிராயில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெறப்படுகின்றது என்ற தகவல் பொலிஸாருக்குக் கிடைத்ததையிட்டு, கடந்த முதலாம் திகதி பொலிஸார் மேற்கொண்ட திடீர் நடவடிக்யையின்போதே, திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்று வந்த ஏழு நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

குற்றவாளிகள் அனைவரும் குற்றத்தினை ஒப்புக்கொண்டதற்கு அமைய நபர் ஒருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா குற்றப்பணம் விதிக்கப்பட்டது. அவர்களிடம் இருந்து மீட்ட திருட்டு மின்சாரத்துக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களை அழிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

# தபாலக வைப்பாளருக்கு பணப்பரிசு வழங்கத்திட்டம்!

(யாழ்ப்பாணம்)

தபாலகத்தில் வைப்பினை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைந்து பிரமாண்டமான பரிசுத் திட்டம் ஒன்றினை அஞ்சல் திணைகளம் வழங்கவுள்ளது.

இந்தப் பரிசுத்திட்டம் தேசிய ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் நடைபெற்று தேசிய ரீதியில் முதல் மூன்று இடங்களுக்கும், மாவட்ட ரீதியில் 28 இடங்களுக்கும் பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

தேசிய ரீதியில் முதலாம் இடத்துக்கு அஞ்சல் அலுவலகத்தில் வைப்புச் செய்தவராயின் 1 லட்சமும, உப அஞ்சல் அலுவலகத்தில் வைப்புச் செய்தவராயின் 50 ஆயிரமும், அதேபோல் - இரண்டாம் இடத்துக்கு அஞ்சல் அலுவலகமாயின் ரூபா 50 ஆயிரம், உப அஞ்சல் அலுவலகமாயின் 25 ஆயிரமும் மூன்றாம் இடதுக்கு அஞ்சல் அலுவலகமாயின் 25 ஆயிரமும், உப அஞ்சல் அலுவலகமாயின் 15 ஆயிரமும் வழங்கப்படும்.

போட்டிகள் நாளைமுதல் ஆரம்பித்து எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெற்று முடிவுகள் 31ஆம் திகதி ஊடகங்கள் மூலம் அறிவிக்கப்படும்.

இதைத் தவிர பொதுமக்களிடையே தேசிய ரீதியாக போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இதில் வெற்றிபெறும் வடிக்கையாளர்களுக்கு முதல் பரிசு ரூபா ஏழு இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூபா ஒரு இலட்சமும், மூன்றாம் பரிசாக ரூபா 50 ஆயிரமும் வழங்கப்படும்

இந்தப்போட்டியில் பங்குபற்றும் வாடிக்கையாளர்களுக்கான தகைமை தபாலகத்திலோ, உபதபாலகத்திலோ ரூபா 100 பெறுமதியான வைப்பு ஒன்றினை வைத்து இருந்தால் போதுமானது, இந்தப் போட்டியும் நாளை முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறுமென அஞ்சல் அதிபர் தெரிவித்தார்.

## றோட்டறிக் கழகத்தின் பதவியேற்பு வைபவம்

சுன்னாகம் றோட்டறிக் கழகத்தின் 10 ஆவது பதவியேற்பு வைபவம் இன்று பகல் 12.30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இதில் புதிய தலைவராக நவரூபன் பதவியேற்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக றோட்டரியின் டொக்டர் றொபோட் அருள்நாயகம் பெஞ்சமின் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத் தலைவர் சரவணபவன் ஆகியோர் கலந்துசிறப்பிக்கவுள்ளனர். (72)

## வாகனங்கள் நிறுத்தத் தடை

மந்திகை ஆலடிச் சந்தைக்கு முன்பாக வாகனங்களை நிறுத்துவதற்கு பருத்தித்துறை பிரதேசசபை தடை விதித்துள்ளது.

இந்தப்பகுதியில் அதிகளவு வாகனங்கள், சைக்கிள்க்ள் நிறுத்தப்படுவதால் வாகன போக்குவரத்துக்கு நெரிசல் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (14)

## வீதி ஒழுங்கு நடைமுறைகளுக்கான அரிமாச் சங்கத்தின் அறிவுரைகள்!

சர்வதேச அரிமாச் சங்கத்தினர் வடக்கின் 16 அரிமாச் சங்கத்தினருடன் இணைந்து வீதிப்பாதுகாப்பு, விபத்துத்தவிர்ப்புத் திட்டம் ஒன்றினைச் செயற்படுத்த உத்தேசித்துள்ளனர்.

இந்தத்திட்ட அங்குரார்ப்பணம் செய்யப்படும் நாளான இன்று காலை 7.30 மணிமுதல் 9.30 மணிவரை முக்கியமான இடங்களில் கூடி மக்களுக்கு வீதிப்பர்துகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை எடுத்துக் கூறுவதுடன், பாதசாரிகள் மற்றும் வாகனச் சாரதிகளுக்கு பிரசுரங்களையும் வழங்கவுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆரம்பித்த செயற்திட்டத்தின் தொடர்ச்சியாகவே தற்போது அரிமாச் சங்கத்தினால் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## செங்கைஆழியானுக்கு சாகித்திய விருது



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க. குணராசாவுக்கு ஜனாதிபதியால் சாகித்திய விருது வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாகித்திய மற்றும் சாகித்தியரத்ன விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. இதில், தமிழ், முஸ்லிம், சிங்கள இனத்தவர்களில் தலா இருவருக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இதில், சாகித்திய விருதை க.குணராசா நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் ஜனாதிபதியிடம் இருந்து நேரடியாகப் பெற்றுக்கொண் டார்.

இதில், சாகித்யரத்ன விருது பேராசிரியர் க.சிவத்தம்பிக்கு வழங்கப்பட்டது. ஆனால், அவர் இந்த விருதினைப் பெறுவதற்கு சமுகமளிக்க வில்லை.

## சிறுவர் முதியோர் தினவிழா

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகம் நடத்தும் முதியோர் சிறுவர்தின நிகழ்வுகள் நாளை மு.ப 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரசஅதிபர் ஆ.சிவசுவாமி பிரதமவிருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக விடுதலைப்புலிகளின் வடமராட்சி அரசியற்துறைப்பொறுப்பாளர் இ.தயா, பருத்தித்துறை கோட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் வடமராட்சி லயன்ஸ் கழகத்தலைவர் எம்.தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் நாளைய நிகழ்வில் முதியோர்களைக் கௌரவித்து அன்பளிப்புகளும் வழங்கப்படவுள்ளன. (14)

## மண்டபம் அமைக்க நிதியுதவி

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள திக்கம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் அமைப்பதற்கு நிகொட் நிறுவனம் ஏழு இலட்சம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது.

திக்கம் பகுதியில் இந்தக் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தினை அமைப்பதன் மூலம் அந்தப்பகுதி அபிவிருத்திகளை முன்னெடுக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. (14)

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு விரைவில் சம்பள உயர்வு!

நாட்டிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கடந்த ஐந்து வருடகால வரலாற்றில் முதற்தடவையாக வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது. இதற்கென திறைசேரி 10 கோடி 30 இலட்சம் ரூபாவை சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சுக்கு வழங்கவுள்ளது.

இதனால், நாட்டிலுள்ள 28 ஆயிரம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நன்மையடைய உள்ளனர். கடந்த 5 வருடகாலமாக இவர்களுக்கு வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்படாதது குறிப்பித்தக்கது.

சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி திறைசேரி உயரதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து மேற்படி 5 வருட கால சம்பள நிலுவையாக 10 கோடி 30 இலட்சம் ரூபாவை வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

## யாழ்.கூடைப்பந்தாட்ட அணி தேசிய மட்டப் போட்டிகளில்

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் 22 வயதுக்குட்பட்ட மற்றும் சிரேஷ்ட ஆண், பெண் அணிகள் இம்மாத இறுதியில் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள அணிகள் நாளையதினம் மாலை நான்கு மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ள தெரிவுப் பயிற்சியில் பங்குபற்றவிரும்பும் வீரர், வீராங்கனைகளின் பெயர் விபரங்களை, உரிய பாடசாலைகள் மற்றும் கழகங்கள் அனுப்பிவைக்குமாறு கூடைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

## சிறுவர், பெற்றோர்களின் ஒன்றுகூடல் நிகழ்வுகள்!

(யாழ்ப்பாணம்)

உலக உளநல நாளை முன்னிட்டு சுகவாழ்வு நிலையத்தினரால் நடத்தப்படும் சிறுவர், பெற்றோர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வுகள் இன்று காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பல்வேறு இடங்களில் நடைபெறவுளளன.

புத்தூர் மெதடிஸ் தமிழ்க் கலவன் பாடசாலை, நீர்வேலி வேதவல்லி மாதர் சங்கம். இருபாலை கிழக்கு கந்தவேள் பாடசாலை, நீர்வேலி சுவர்ணா சனசமூக நிலையம், உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம் போன்ற இடங்களிலேயே இந்த ஒன்றுகூடல் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

## இயக்குநர் சபை தெரிவு

புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அண்மையில் நடத்திய பொதுக் கூட்டத்தில் பல நோக்கு கூட்டுறவு சங்க புதிய இயக்குநர்சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக ஜி.எம்.இராமச்சந்திரனும் உபதலைவராக பி.ஆறுமுகநாதன், உறுப்பினர்களாக எம்.தம்பையா, எஸ்.குகன், எஸ்.சிவபாதசுந்தரம், பி.திருச்செல்வம், வி.இரவீந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (14)

## நெடுந்தீவு பிரதேசசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்



நெடுந்தீவு பிரதேசசபையின் 2004 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வார விழாவினை முன்னிட்டு இன்று காலை 9 மணி முதல் நெடுந்தீவில் பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை நெடுந்தீவு பிரதேசசபை பொது நூலகத்தில் கணினி புத்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. மாலை 4மணிக்கு நெடுந்தீவு மத்தி சீக்கிரியாம் பள்ளம் விளையாட்டு மைதானத்தில் கயிறிழுத்தல் போட்டி மற்றும் நெடுந்தீவு பிரதேச அணிக்கும், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி அணிக்குமிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியும் இடம்பெறவுள்ளன.

நாளையதினம் நெடுந்தீவு மேற்கு நெழுவிழி ஆலயவீதியில் இருந்து நெடுந்தீவு மாவிலித்துறை முகத்தில் அமைந்துள்ள தவத்திரு தனிநாயகம் அடிகளின் சிலை வரைக்குமான சுமார் நான்கு கிலோ மீற்றர் தூர குதிரையோட்டப்போட்டி இடம்பெறவுள்ளது.

அத்துடன் மாவிலித் துறைமுகப் பகுதியில் அமைக்கப்பட்ட துறைமுக அலங்காரவளைவு திறந்துவைத்தல், துறைமுகத்தில் அமைந்துள்ள வெளிச்சக்கோபுர விளக்கு திறந்து வைத்தல் ஆகிய நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இதையடுத்து, நாளை மாலை 4.30 மணி முதல் நெடுந்தீவு யோகேந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள பிரதேசசபை பொது மண்டபத்தில் பிரதேசசபையின் செயலாளர் ச.பொ.தில்லைநாதன் தலைமையில் உள்ளூராட்சி வார விழா இடம் பெறவுள்ளது.

இந்தநிகழ்வின் பிரதம விருந்தினர்களாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் - கலை நிகழ்வுகளும், பரிசில் வழங்கலும் இடம்பெறும். (113)

## திரைப்படக்காட்சி

யாழ். பல்கலைக்கழகத் திரைப் படவட்டத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் ஆறு குறுந்திரைப் படங்கள் வீடியோப்படக்காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளன.

சீனிவாசனின்- சிறகுகள், சி.எம்.ரமேஷின்- வெளிச்சம், சுகாஷினியின் - காய்ச்சமரம்,ஜவஹறின்-கலமண்டபம், தியாகராஜனின்- ஜனனம், வசந்தின் - தங்கையின் மீது நான்கு கண்கள் ஆகியனவே ஆறு குறுந் திரைப்படங்களாகும்.

படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர்கள் அ.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் காண்பித்த படங்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெறவுள்ளது.


சிறு விளம்பரம்

முகமதி கிறைண்டிங் மில்

வினாகிரி, அயடின் கலந்து உப்பு, ஐசிங் சீனி, பேக்கிங் பவுடர், சிற்றிக் அசிட் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள முகமதி கிறைண் டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/3022)

நாகம்ஸ் சுன்னாகம்

09.10.04 அன்று இலங்கை-இந்தியா ஒரேதின வெளியீடான ஸ்ரீகாந்த சினேகா நடித்த போஸ் (கலர்)



காட்சிநேரம் 11,07,03,10

ராஜா யாழ்ப்பாணம்.

10 ஆம் திகதிவரை

அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த



காட்சிநேரம் 10.30,2.30, 6.30 (பு.நே) சனி, ஞாயிறு இரவு 9.30 மணிக்கும்

அரசாட்சி

11 முதல் திருடா திருடி

(சி-2725)

நிறைஞ்சனல்ஸ் சங்கானை

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், மஞ்சுளா, நாகேஷ் நடித்த

ரிக்ஷாக்காரன்

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

MEET THE PARENTS

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

(சி-2723)

PUBLIC LIBRARY JAFFNA CHUNDIKULY BRANCH

# கொழும்பு நகர பாதுகாப்புக்கு புதிய செயற் திட்டங்கள் அமுல்

இராணுவத்தினரும், பொலிஸ் புல னாய்வுப் பிரிவும் இணைந்து பாது காப்பு செயற்திட்டங்களை மேற் கொள்ளவுள்ளதாக பாதுகாப்பு தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் புதிய பொலிஸமா அதிபர் சந்திரா பெர்ணான்டோவை சந்தித்த பின்னர், அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

குறிப்பாக கொழும்பு நகர்ப் பகுதி களில் இடம்பெறும் குற்றச்செயல் களை கட்டுப்படுத்தும் வகையில் இந்தத் திட்டத்தை தாம் நடைமுறைப் படுத்தவுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

இதேவேளை பொலநறுவையில் ஹோட்டல் ஒன்றின் முகாமையாள ரைக் கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நான்கு பொலிஸா ரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நேற்றுமுன்தினம் பொல நறுவை நீதிவான் உத்தரவிட்டார். இவர்கள் தாக்கியதால் ஏற்பட்ட உள்காயமே மரணத்துக்கு காரணம் என ஏற்கனவே பிரேத பரிசோதனை யில் தெரியவந்தது குறிப்பிடத்தக்கது.

# நோர்வே சமாதானப் பிரதிநிதிகளின் இலங்கை விஜயம் தாமதமாகும்

## தூதரக தகவல்கள் தெரிவிப்பு!

சமாதான செயற்பாடுகள் தொடர் பாகத் தோன்றியுள்ள நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணப்படாத காரணத்தால், எதிர்வரும் டிசம்பர் மாதம்வரை சமாதானப் பேச்சுக் களை ஆரம்பிக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகத் தூதுவராலய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் விசேட சமாதா னத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் விசேட தேவைகள் எது வும் ஏற்படாதவரையில், எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்கு முன்னர் இலங் கைக்கு வரமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி ஹெல்கிசன் இருவாரகால பயண மொன்றை மேற்கொண்டு டிசம்பர் மாதமளவில் இலங்கைக்கு வருவ தற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், இந்த விஜயம் ஹெல் கிசன் அலுவலகத்தின் மூலம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்களை மீள வும் ஆரம்பிப்பது தொடர்பாக அர சுக்கும் - புலிகளுக்கும் இடையே எடுக்கப்படவேண்டிய தீர்மானங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பாக நோர்வேயின் விசேட பிரதிநிதியால் இரு தரப்புக்கும் தெரி யப்படுத்தப்பட்டிருப்பதால் - மீண் டும, மீணடும் இலங்கைக்கு வந்து இதனை நினைவுபடுத்துவது பய னற்றது என,

, நோர்வே பிரதிநிதி இது குறித்து அண்மையில் - லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தபோது கூறியுள்ளார்.

இதனால் நவம்பர் முதல் வாரத் தில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு மேற்கொள்ளவிருந்த பய ணமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (தே)

# பேச்சுவார்த்தை மேசையில் வைத்து ஈழத்தை வழங்க முனைகின்றனர்!

## - எஸ்.எல்.குணசேகர கூறுகிறார்

இடைக்கால நிர்வாகசபை யோசனை மூலம் புலிகளின் நிர்வாகமே நடக் கப்போகிறது. புலிகளால் யுத்தத் தின் மூலம் பெற்றுக்கொள்ள முடி யாத ஈழ ராஜ்ஜியத்தை தெற்கின் சில ஏமாற்றுக்கார அரசியல்வாதி கள் சமாதான மேசையில் வைத்து வழங்குவதற்கு ஆயத்தமாகிறார் கள் என சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகசபை ஆலோ சனையை அடிப்படையாகக் கொணடு பேச்சுக்களை ஆரம்பிப்பது தாயைக் கற்பழிப்பதற்கு - மகனால் வகுக்கப் படுகின்ற கோரிக்கைக்குப் பேச்சு வார்த்தை நடத்துவதைப் போன்றதே.

"இனத்தை விற்பதற்கு அல்ல பாதுகாப்பதற்கே" என்ற தலைப்பில் வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பி னால் ஏற்பாடு செய்யப்பட்டு கொழும்பு பொது நூல்நிலையத்தில் அண் மையில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இன்று நாடு மிகவும் பயங்கர மான நிலைமைக்குள் தள்ளப்பட்டுள் ளது. இந்த நிலையில் நாட்டின் ஒரு பகுதியைப் புலிகளுக்குத் தாரை வார்ப்பதற்குச் சிலர் காத்துக் கொண டிருக்கிறார்கள்.

தெற்கிலுள்ள சில ஏமாற்றுக்கார அரசியல்வாதிகள் இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப் படையில் பேச்சுவார்த்தை களை நடத்துமாறு கூறுகின்றனர். இப்படி யான தேசத்துரோக அரசியல் வாதிகளால் நாட்டின் ஒரு பகுதி யைப் புலிகளுக்குக் கொடுப் பது மாத்திரமல்ல, புலிகள் தங்களது எதிர்பார்ப்பை நிறைவேற்றவும் சந் தர்ப்பம் வழங்கியுள்ளனர்.

முதலில் இடைக்கால நிர்வாகத் தைத் தாருங்கள் அதற்குப் பின்னர் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்போம் எனப் புலிகள் கூறுகின்றனர். அதனை செயற்படுத்தினால் என்ன நிகழும். அரசின் அலோசனைகளையும் புலிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார் கள். இடைக்கால நிர்வாகத்தின் மூலம் ஆட்சி அதிகாரத்தைப் பெறு வார்கள்.

இடைக்கால நிர்வாகம் குறித்து கால எல்லை நிர்ணயிக்கப்பட வில்லை. அதனால் சதாகாலமும் வடக்கு - கிழக்கு நிர்வாகம் புலிகளுக்கு உரிமையாகிவிடும் எனத் தெரிவித்தார்.

# திலக் கருணாரட்ன ஐ.தே.கட்சியில் இணைவு

சிஹல உறுமயவின் முன்னாள் தலைவர் திலக் கருணாரட்ண ஐக் கிய தேசியக் கட்சியின் அங்கத் துவத்தைப் பெற்றுக் கொண்டுள்ள தாக தெரிய வருகிறது.

இதன்படி திலக்கருணாரட்ன வுக்கு பண்டாரகம தொகுதியின் அமைப்பாளர் பதவியை மீண்டும் வழங்குவதற்கு ஜக்கிய தேசியக் கட்சியின் தலைமை தீர்மானித் துள்ளது.

இதேவேளை இவர் ஜக்கிய தேசிய கட்சியுடன் இணைவது தொடர பாக விரைவில் விசேட அறிக்கை யொன்றையும் வெளியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக் கின்றன. (தே)



இலங்கையில் ஒரே பிரசவத்தில் அதிகூடிய பிள்ளைகள் பிரசவித்த தாய் சாமிலா வீரசேகரவும் அவரது ஐந்து குழந்தைகளும்

# திருமலையில் இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு

(திருமலை)

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச் சாத்தாகி இரண்டரை வருடங்களா கியும் எதுவித மாற்றங்களும் ஏற் படாதை வெளிப்படுத்தும் தமிழ் மக்கள் மீது மீண்டு மொரு யுத்தத் தைத் திணிக்க அரசு முயற்சிப்ப தைக் கண்டித்தும் இன்று திருகோண மலையில் பூரண ஹர்த்தால் அனுஷ டிக்கப்படவுள்ளது.

எட்டு கோரிக்கைகளை முன் வைத்து இந்த ஹர்த்தால் அனுஷ டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக் கது.

❖ தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியுள்ள இடைக்காலத் தன் னாட்சி வரைவின் அடிப்படையில் உடனடியாகப் பேச்சுவார்த்தையைத் தொடங்க வற்புறுத்தியும்

❖ திருமலையில் சட்டவிரோத மான முறையில் வேகமாகக் கட்டப் பட்டுவரும் பௌதத விகாரைகள், சிங்களக் குடியேற்றங்கள் என்பன வற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும்

❖ சமாதானத்துக்கு எதிரான இன வாத சக்திகள் மற்றும் தேச விரோ திகளின் நடவடிக்கைகளைக் கண் டித்தும், மேலும் இனவாத அமைப் புக்கள் திருமலையைத் தமது வன் முறையின் மத்திய இடமாக மாற்றி யுள்ளதைக் கண்டித்தும்

❖ அமெரிக்கா உட்பட சர்வதேச ஏகாதிபத்தியவாதிகள் தமிழீழ விடு தலைப் புலிகளை வற்புறுத்துவதை விடுத்துத் தென்னிலங்கை சிங்கள இனவாத அரசியல் சக்திகளுக்கே சமாதானம் பற்றி அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும்

❖ படையினர் புதிய காவல் அரண்களை அமைத்துக் கொண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் காவலரண்களை அகற்று மாறும் பின்நோக்கி நகர்த்துமாறும் கேட்டுக் கொள்வதைக் கண்டித்தும்

❖ யாழ்ப்பாணத்தில் மனித உரிமை கள் ஆணைக்குழு அதிகாரிகள் படையினரால் தாக்கப்பட்டதை வன் மையாகக் கண்டித்தும்

❖ அண்மையில் இலங்கை ஜனா திபதி ஐ.நா.சபையில் ஆற்றிய உரைக்குக் கடும் எதிர்ப்புத் தெரி வித்தும்

❖ இலங்கை, இந்திய அரசின் கூட்டு சக்தியால் குமரப்பா, புலேந் திரன் உட்பட 12 வீரத் தளபதிகள் மாவீரர்களான 17 ஆம் ஆண்டு நினைவை நெஞ்சில் நிறுத்தியும்

இந்தக் ஹர்த்தால் அனுஷ்டிக் கப்படவுள்ளது.

# கொலன்னாவ சுமங்கலதேரர் இன்று பதவி விலகுகிறார்!

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமயவின் நாடாளு மன்ற உறுப்பினர் கொலன்னாவ சுமங் கல தேரர் இன்று தனது பதவியில ருந்து விலகவுள்ளார். இவருக்குப் பதிலாக புஞ்ஞாசாரதேரர் பதவி யேற்கவுள்ளார்.

தமது பதவியை இராஜினாமா செய்வற்கு தமக்கும் கட்சிக்கும் இடை யில முரண்பாடுகளே காரணமென வெளியான தகவலை சுமங்கல தேரர மறுத்துள்ளார்.

தமக்கு குறுகிய காலம் மாத்திரமே அரசியலில் இருக்கும் நிலைப்பாடு இருந்ததன் அடிப்படையிலேயே தாம் பதவி விலகுவதாக அவர் தெரித்தார்.

கொலன்னாவ சுமங்கல தேரரே முன்னர் நாடாளுமன்றத்தில் தாக் குதலுக்கு உள்ளானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்த ராஜனாமாவா னது சிஹல உறுமயவின் பலய், ஹெல உறுமயவில் அதிகரித்துள்ளமையைக் காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே எல்லாவல மேதானந்த தேரர் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவராக இருக்கும் போதே, அத் துரலியே ரத்ன தேரர் நடாளுமன்றக் குழுத்தலைவராக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அத்துரலியே ரத்ன தேரர் சிஹல உறுமய கட்சியைச் சேர்ந்தவர் என் பது குறிப்பிடத்தக்கது.

# இராமேஸ்வரம் மீனவர்கள் பகிஷ்கரிப்பில் குதித்தனர்

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீன வாகளை விடுவிக்குமாறு கோரி, இரா மேஸ்வரம் மீனவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை கச்சதீவுப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த 20 இந்திய மீனவர் களை, இலங்கை கடற்படையினர் கைதுசெய்து, மன்னார் பொலிஸாரி டம் ஒப்படைத்தனர்.

இவர்களில் 15 பேர் கடந்த திங் கட்கிழமை மன்னார் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டனர். எனினும் மிகுதி ஐவரும் அநுராதபுரம் சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களையும் விடுதலை செய்யு மாறு கோரியே, மீனவர்கள் கடலுக் குச் செல்லாது பகிஷ்கரிப்புப் போராட் டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# புதிய வன்னிப்படைத் தளபதி புலிகளுடன் சந்தித்துப் பேச்சு

வவுனியா குருமன்காட்டில் - வவு னியா மாவட்ட போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவினரின் ஏற்பாட்டில் இராணுவத் அதிகாரிகளுக்கும், புலிக ளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தச் சந் திப்பில் இராணுவத்தரப்பில் வன்னி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க, லெப்டினனட் கேணல் சேனநாயக்க, பொலிஸ் அத்தியட் சகர் நெவில் குருகே ஆகியோர் பங்கு கொண்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தரப் பில் வவுனியா மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் ஞானவேல், மகளிர் அரசியற்துறைப்பொறுப் பாளர் அலை ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பு இரண் டரை மணி நேரம் நடைபெற்றது. காலபோகம் தொடங்கியுள்ளதால், உயர்பாதுகாப்பு வலயப் பகுதி யிலுள்ள கல்மடு குளப்பகுதியில் விவ சாய நிலத்தை மக்களின் பயன் பாட்டுக்கு வழங்குமாறு விடுதலைப் புலிகள் இந்தச் சந்திப்பில் வலி யுறுத்தியிருந்தனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக உடனடியாக எதுவும் கூறமுடியாது என்றும், பின்னர் பேச்சுக்களை நடாத்த முடியும் எனவும் இராணுவ அதிகாரி கள் தெரிவித்தனர்.

இதேபோல் மாணவர்களை விடு தலைப் புலிகளின் செயற்பாடுகளுக் குப் பயன்படுத்த வேண்டாமென இரா ணுவத்தரப்பினர் கோரியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (03)

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்போருக்கு சன்மானம்

உள்நாட்டில் சட்ட விரோத ஆயு தங்கள் வைத்திருப்பவர்கள் அத னைக் கையளிப்பதற்காக இரண்டு மாத கால அவகாசம் வழங்கியுள்ள இலங்கை அரசாங்கம், இதனை ஊக்கு விப்பதற்காக சன்மானத் தொகையை யும் வழங்கவுள்ளது.

பாதுகாப்பு மற்றும் சமாதா னம் தொடர்பான அமைச்சின் கணிப்பீட் டினபடி உள்நாடடில் சுமார் 50 ஆயிரம் சட்ட விரோத ஆயுதங்கள் இருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, பாதுகாப்பு அமைசசால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையின் படி, க்டந்த முதலாம் திகதிமுதல் எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதி வரை சட்ட விரோத ஆயுதங்கள் வைத்திருப்பவர்களுக்குப் பொது மன்னிப்பு காலம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் ஆயு தங்களை ஒப்படைப்பவர்களுக்கு ரி 56 ரக துப்பாக்கிக்கு - ரூபா 50 ஆயிரம், கைத்துப்பாக்கி மற்றும் ரிவோல்வருக்கு - ரூபா 15 ஆயிரம், 303 ரக துப்பாக்கி - ரூபா 30 ஆயிரம், தன்னியக்க துப்பாக்கி ரூபா 25 ஆயிரம், கைக்குண்டுக்கு ரூபா 5 ஆயிரமும் சன்மானம் வழங்கப்படவுள்ளது.

# பெங்களூர் டெஸ்ட் போட்டி; இந்தியா நெருக்கடி நிலையில்





பெங்களூரில் நடைபெற்றுவரும் இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டத்தில் இந்திய அணி 150 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து மோசமான நிலையில் உள்ளது.

அவுஸ்ரேலியா முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 316 ஓட்டங்களை எடுத்திருந்தது. கிளார்க் 76 ஓட்டங்களுடனும், கில்



கிறிஸ்ட் 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

2 ஆவது நாள் ஆட்டம் நேற்று நடந்தது. கிளார்க்கும் கில்கிறிஸ்ட்டும் தொடர்ந்து ஆடினார்கள். இருவரும் இந்திய பந்துவீச்சை விளாசித் தள்ளி ஓட்டங்களைக் குவித்தனர். குறிப்பாக கில்கிறிஸ்ட் ஆட்டத்தில் அனல் பறந்தது.

கிளார்க் சிறப்பாக ஆடி சதம் அடித்தார். 170 பந்துகளில் 14 பவுண்டரி, 2 சிக்ஸருடன் அவர் 100 ஓட்டங்களைத் தொட்டார். தனது முதல் டெஸ்டிலேயே கிளார்க் சதம் அடித்து அனைவரையும் பரவசப்படுத்தினார். அறிமுக டெஸ்டில் சதம் அடித்த 17 ஆவது அவுஸ்ரேலிய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். சர்வதேச அளவில் 79 ஆவது வீரராவார்.

அவரைத் தொடர்ந்து கப்டன் கில்கிறிஸ்ட் சதம் அடித்தர். அவர் 103 பந்துகளில் 13 பவுண்டரி, 3 சிக்ஸருடன் 100 ஓட்டங்களைக் கடந்தார். டெஸ்ட் போட்டியில் கில்கிறிஸ்டின் 11 ஆவது சதம் இதுவாகும்.

மதிய உணவு இடைவேளையின் போது கடைசி ஓவரில் இந்த ஜோடி பிரிந்தது. கில்கிறிஸ்ட் 104 ஓட்டங்களை எடுத்திருந்தபோது, ஹர்பஜன்சிங் பந்தில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அப்போது அவுஸ்ரேலியாவின் ஸ்கோர் 6 விக்கெட் இழப்புக்கு 423 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது. 6 ஆவது விக்கெட்டான கிளார்க் - கில்கிறிஸ்ட் ஜோடி 167 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மதிய உணவு இடைவேளைக்கு பின்னர் ஹர்பஜன்சிங்கின் பந்துவீச்சுக்கு அவுஸ்ரேலிய அணியின் எஞ்சிய விக்கெட்டுக்கள் சரிந்தன.

அவுஸ்ரேலியா 130 ஓவர்களில் 472 ஓட்டங்களைக் குவித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. கிளார்க் 151 ஓட்டங்களை எடுத்தார். ஹர்பஜன்சிங் 5 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

பின்னர் முதல் இனிங்ஸை ஆடிய இந்தியாவுக்கு தொடக்கமே அதிர்ச்சியாக இருந்தது. சோப்ராவும், ராவிட்



டும் அடுத்தடுத்து ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

பின்னர் 3 ஆவது விக்கெட்டிற்கு ஜோடியாக ஷேவாக்கும், கங்கூலியும் சேர்ந்து விரைவாக ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்திய அணியின் ஸ்கோர் 87 ஆக இருக்கும்போது ஷேவாக் 39 ஓட்டங்களுடன் கஸ்பரோவிச் பந்தில் லாங்கரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அத்னைத் தொடர்ந்து இந்திய விக்கெட்டுகள் சரியத் தொடங்கின. அடுத்து 47 ஓட்டங்களை எடுத்த நிலையில் கஸ்பரோவிச் பந்தில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து கங்கூலி ஆட்டமிழந்தார்.

அப்போது இந்தியா 98 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட்டுக்களை இழந்தது. அடுத்து லக்ஷ்மனுடன் யுவராஜ்சிங் ஜோடி சேர்ந்தார். அவர் 5 ஓட்டங்களுடன் மெக்ரா




பந்தில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அதனைத் தொடர்ந்து பட்டேல் ஆடவந்தார். 31 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் வோர்னின் பந்தில் லக்ஷ்மன் போல்டாகி வெளியேறினார். அடுத்து இர்பான் பதான் ஆட வந்தார்.

இரண்டாம் நாள் ஆட்டமுடிவில் இந்தியா 44 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்களை எடுத்துள்ளது. அவுஸ்ரேலியா தரப்பில் மெக்ரா அபாராமாக பந்துவீசி 3 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

இந்தியா பொலோ - ஒன்னைத் தவிர்க்க இன்னும் 124 ஓட்டங்களை எடுக்கவேண்டும். கைவசம் 4 விக்கெட்டுக்கள் மட்டுமே இருப்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணி ஆலோசகராக சுனில் கவாஸ்கர் நியமனம்!



இந்திய கிரிக்கெட் அணியின் ஆலோசகராக இந்தியாவின் முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னணி வீரர்களில் ஒருவராக திகழ்ந்தவரும், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனுமான சுனில் கவாஸ்கரை இந்திய அணியின் ஆலோசகராக நியமித்திருப்பதாக இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அவுஸ்ரேலியாவுடனான கிரிக்கெட் டெஸ்டில் இந்திய அணிக்குத் தேவையான ஆலோசனைகளையும், தொழில்நுட்பங்களையும் கவாஸ்கர் வழங்குவார். கிரிக்கெட்டில் பல சாதனைகளைப் புரிந்த கவாஸ்கர் அவருடைய அனுபவங்களை இந்திய கிரிக்கெட் வீரர்களுடன் பகிர்ந்துகொள்வார்.

ஆலோசகராக அறிவிக்கப்பட்ட கவாஸ்கர், பெங்களூர் சென்று இந்திய அணியுடன் சேர்ந்துகொண்டார். இந்திய அணியின் ஆலோசகராக கவாஸ்கர் நியமிக்கப்பட்டாலும், இந்திய அணியின் பயிற்சியாளராக ஜோன் ரைட் நீடிப்பார் என்றும் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஜோன் ரைட்டின் பணிகளில் கவாஸ்கர் தலையிடமாட்டார் என்றும் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. திருவனந்தபுரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய கிரிக்கெட் சபை இந்த முடிவை அறிவித்தது.

இந்திய அணி என்ற அமைப்புக்குள் மீண்டும் நான் வந்ததுபோல உணருகிறேன் என ஆலோசகராக நியமிக்கப்பட்ட கவாஸ்கர் கூறியுள்ளார். என்னுடைய அனுபவங்களை அணி வீரர்களுடன் பகிர்ந்துகொள்வேன் எனவும் கவாஸ்கர் கூறினார்.

# டெண்டுல்கர் இல்லாவிட்டாலும் இந்தியா தொடரை வெல்லும்!

## வசீம் அக்ரம் தெரிவிப்பு



அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றும். டெண்டுல்கர் அணியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தொடரை கைப்பற்ற நல்ல வாய்ப்பு இருக்கிறது என, பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் வசீம் அக்ரம் தெரிவித்தார். புனேயில் செய்தியாளரிடம் பேசிய அவர் -

டெண்டுல்கர் ஆடாவிட்டாலும் இந்திய அணி சமபலத்துடன்தான் இருக்கிறது. பொண்டிங் இல்லாதது அவுஸ்ரேலிய அணிக்குப் பலவீனமே. அந்த அணியில் 4 புதுமுக வீரர்கள் உள்ளனர். அவர்கள் கும்ளே, ஹர்பஜன் சிங் சுழற்பந்தை சந்திக்கத் திணறுவார்கள்.

எந்த ஒரு அணிக்கும் வெளிநாட்டு பயிற்சியாளர் இருப்பது நல்லதுதான். உதாரணத்துக்கு பாகிஸ்தான் அணிக்கு பொப் வூல்மர் பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட பிறகு அணி நன்றாக இருக்கிறது. பொதுவாக கப்டன் - பயிற்சியாளரிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். பாகிஸ்தான் கப்டன் இன்ஸமாமும், பயிற்சியாளர் வூல்மரும் ஒருங்கிணைந்து செயற்படுகிறார்கள்.

வீரர்கள் வாய்ப்புக் கிடைக்கும் போது சமுதாயப்பணியிலும் ஈடுபடுவது நல்லது. இவ்வாறு அவர் கூறினார்.

# நல்லூர் கோட்டத்தில் யாழ்.இந்து அணி சம்பியன்

யாழ்.கோட்ட பாடசாலைகளிடையே - யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றுவருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில், 14 வயதுப் பிரிவில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இந்தப் பிரிவில் இரண்டாம் இடத்தை செங்குந்தா இந்துக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெற்று வலய மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. (58)

# சங்கானை கல்விக்கோட்ட உதைபந்தாட்ட முடிவுகள்

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் பின்வரும் பாடசாலைகள் வெற்றியீட்டின.

**14 வயதின்கீழ் -**

1 ஆம் இடம் - சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, 2 ஆம் இடம் - அராலி இந்துக் கல்லூரி, 3 ஆம் இடம் - அராலி கிழக்கு அ.மி.த.பாடசாலை

**16 வயதின்கீழ் -**

1 ஆம் இடம் - அராலி இந்துக் கல்லூரி, 2 ஆம் இடம் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, 3ஆம் இடம் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.

**18 வயதின்கீழ் -**

1 ஆம் இடம் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, 2 ஆம் இடம் அராலி இந்துக்கல்லூரி, 3 ஆம் இடம் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. (48)




# வடமராட்சி வலயமட்ட உதைபந்தாட்ட போட்டிகள்

வடமராட்சி பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி 3 மைதானங்களில் தினமும் பி.ப 2.30 மணிக்கு நடைபெற்றுவருகிறது. நாளை இடம்பெறும் ஆட்டங்களாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் -

16 வயது ‘சி’ பிரிவில் உடுத்துறை மகா வித்தியாலயத்தை எதிர்த்து கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடாசலையும்,

16 வயது ‘ஏ’ பிரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்து வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையும்,

18 வயது ‘பி’ பிரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்து உடுத்துறை மகா வித்தியாலயமும் மோதவுள்ளன.

டயமன்ஸ் மைதானத்தில் 16 வயது ‘ஈ’ பிரிவில் மணற்காடு வித்தியாலயத்தை எதிர்த்து வல்வை சிதம்பரக் கல்லூரியும்,

16 வயது ‘ஏ’ பிரிவில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தை எதிர்த்து இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும்,

18 வயது ‘டி’ பிரிவில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியை எதிர்த்து மணற்காடு வித்தியாலயமும் மோதவுள்ளன.

பொம்மஸ் மைதானத்தில் 16 வயது ‘சி’ பிரிவில் ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியும், 18 வயது ‘சி’ பிரிவில் கொற்றாவத்தை அ.த.க பாடசாலையை எதிர்த்து வல்வை சிவகுரு வித்தியாலயமும் மோதவுள்ளன. (12)

# கபில்தேவின் சாதனையை முறியடிப்பதே இலக்கு!

## கும்ளே தெரிவிப்பு



(பெங்களூர்)

இந்திய அணியின் முன்னாள் வீரர் கபில்தேவ் கைப்பற்றிய 434 விக்கெட் என்ற சாதனையை முறியடிப்பதுதான் தனது நோக்கம் என, இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அனில்கும்ளே தெரிவித்தார்.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில், இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான கும்ளே 86 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

3 ஆவது விக்கெட்டாக கடிச்சை ஆட்டமிழக்கச் செய்தபோது அவர் 400 ஆவது விக்கெட்டை கைப்பற்றினார். கும்ளே 85 டெஸ்ட்களில் விளையாடி 400 விக்கெட்டுக்களை எடுத்துள்ளார்.

இந்த இலக்கை எட்டிய 9 ஆவது சர்வதேச வீரர் என்ற பெருமையையும், 2 ஆவது இந்திய வீரர் என்ற சாதனையையும் பெற்றார்.

முரளிதரன் (இலங்கை) 532 விக்கெட்டுக்களையும், வோர்ன் (அவுஸ்ரேலியா) 527 விக்கெட்டும், வோல்ஷ் (மேற்கிந்தியத்தீவுகள்) 519 விக்கெட்டும், மெக்ரா (அவுஸ்ரேலியா) 440 விக்கெட்டும், கபில்தேவ் (இந்தியா) 434 விக்கெட்டும், ஹேட்லி (நியூஸிலாந்து) 431 விக்கெட்டும், வசீம் அக்ரம் (பாகிஸ்தான்) 414 விக்கெட்டும், அம்ரோஸ் (மேற்கிந்தியத்தீவுகள்) 405 விக்கெட்டுகளை எடுத்தவர்களின் பட்டியலில் கும்ளேயும் இணைநதுள்ளார்.

400 விக்கெட்டுக்களை கைப்பற்றியது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இது உண்மையிலேயே பாராட்டுக்குரியதாகும். எனது பந்து வீச்சு திருப்தி அளிக்கிறது.

டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட் கைப்பற்றிய இந்திய வீரர் கபில்தேவ் ஆவார். அவரது சாதனையை முறியடிப்பதே எனது முதல் லட்சியம் ஆகும். இதற்கு இன்னும் 35 விக்கெட்டுக்களே தேவை. இவ்வாறு கும்ளே கூறினார்.

PUBLIC LIBRARY JAFFNA

# சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் பொறுப்பு மாணவ சமூகத்திடமே இருக்கின்றது

## நல்லொழுக்க தின நிகழ்வில் பிரதேச செயலர் திருவாகரன்

கடந்த பல வருடங்களாக எமது கலை, கலாசார விழுமியங்களைக் கட்டிக்காத்து வந்த யாழ்.குடாநாட்டு சமுதாயம் -இன்று அனைத்து வழிகளாலும் சின்னாபின்னப்பட்டு போதைவஸ்துக்கும், மதுவுக்கும் அடிமைப்பட்டு, நல்லொழுக்கம் சிறிதுமற்ற சமுதாயமாக மாறி வருகிறது. இது இப்படியே சென்றால், சிறிது காலத்தில் தமிழரின் நாகரீகமே தறிகெட்டதாகிவிடும்.

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு, போரூட் அமைப்பால் மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடாத்தப்பட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.தெற்கு பிரதேச செயலர் சி.திருவாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

சக்தி அமைப்பின் தலைவர் சா.தங்கராசா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், அவர் தொடர்ந்து பேசுகையில் -

முன்னர் வெளிவந்த திரைப்படங்கள் சமூக ஒற்றுமையையும், ஒழுக்கத்தையும் பேணிப் பாதுகாப்பதை வலியுறுத்தின. ஆனால் இந்தக்காலத் திரைப்படங்கள், பாடல்கள் என்பன சமுதாயத்தைச் சீரழிக்கும் வகையில் இருக்கின்றன. இவற்றைப் பார்க்கும் இளம் தலைமுறையினர்-தாமும் அவற்றைப் பின்பற்றி நடக்க முற்படுகின்றனர்.

இதற்கு இதுபோன்ற நல்லொழுக்க வைபவங்கள், மது எதிர்ப்புப் பிரசாரம், போதைவஸ்துக்களின் தீமை போன்றவற்றை சமுதாயத்துக்கு எடுத்தியம்ப வேண்டும்.

அன்னப்பறவைபோல நாமும் தீயனவற்றை விலக்கி, நல்லனவற்றையே நாடவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

போரூட் திட்ட முகாமையாளர் அன்ரோஸ் ஸ்ரென்விக் பேசும்போது - நல்லொழுக்கம் பற்றிய இந்த விழாவில், பெருந்தொகையான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர். இதிலிருந்தே யாழ்.குடாநாட்டு மாணவர்கள் நல்லொழுக்கத்துக்கு எவ்வளவு மதிப்பு வைத்துள்ளார்கள் என்பது புலப்படுகிறது. ஒருசில மாணவரின் தவறான செயற்பாடுகள் காரணமாக - முழு மாணவ சமுதாயமும் களங்கப்படக்கூடாது.

இளைஞர்கள், யுவதிகள் இளம் பருவத்தில் பல சவால்களை ஏற்றுக் கொள்ளவேண்டியுள்ளது. அப்படிப்பட்ட வேளைகளில் நல்லொழுக்கத்தைப் பின்பற்றத் தவறக்கூடாது. தெல்லிப்பளைக் கோட்டக்கலவிப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் உரையாற்றுகையில் - தனி ஒருவரால் மட்டுமே மதுவிலக்கல், நல்லொழுக்கம், சகோதரத்துவம் என்பவற்றை நெறிப்படுத்த முடியாது. இதுபோன்ற அமைப்புக்களூடாக நாமெல்லோரும் சேர்ந்து நல்ல சமுதாயம் ஏற்பட உதவவேண்டும். இந்த விழாவின் குறிக்கோளும் அதுவே. மாணவர் சக்தி - மாபெரும் சக்தி. மதுவிலக்கிலிருந்து உங்கள் பெற்றோர், உற்றார், நண்பர்கள் விடுபட நீங்கள் அவர்களுக்கு அறிவுரை கூறவேண்டும்.

யாழ்.குடாநாட்டில் இன்று ஏற்பட்டுள்ள கலாசார சீரழிவுக்கு - மதுவும், போதைவஸ்தும் மிக முக்கியமான காரணிகளாகும். எனவே, இவற்றிலிருந்து சமுதாயத்தை மீட்டெடுத்து நல்வழிப்படுத்தவேண்டிய பொறுப்பு மாணவர்களிடத்தே விடப்பட்டுள்ளது எனக் கூறினர்.

பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்களின் பேச்சு, கலை நிகழ்ச்சிகள், கவிதை, கட்டுரை, சித்திரப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு இந்த நிகழ்வில் பரிசில்களும் வழங்கப்பட்டன. (101)

# குரங்குக் கடிக்கு இலக்கான சிறுவன் வைத்தியசாலையில்

நாவாந்துறையில் வைத்து குரங்குக் கடிக்கு ஆளான சிறுவன் - யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். தனிமையில் நின்று விளையாடிக்கொண்டிருந்த சிறுவனின், முகத்தில் கடித்துக் காயப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

வி.சுரேஸ் (வயது 08) என்ற இந்தச் சிறுவன் - வன்னியில் இருந்தபோதும் குரங்குக் கடிக்கு ஆளானதாகவும் தெரியவருகிறது.

கொட்டடி, நாவாந்துறை, பொம்மைவெளிப்பகுதிகளில் மந்தி மற்றும் சிறு குரங்குகள் பல காணப்படுவதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். (206)

# விளம்பரப் பலகைகள் விசமிகளால் நாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள பல விளம்பரப் பலகைகள் - விஷமிகள் சிலரால் நாசம் செய்யப்பட்டு வருகிறன. யாழ்.நகரின் கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி, ஆரியகுளம் சந்தி ஆகிய பகுதிகளிலுள்ள தனியார் நிறுவனங்களுக்கென - பல விளம்பரப் பலகைகளே அண்மைக் காலத்தில் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டு, நடப்பட்டிருந்தன.

இதனைச் சகிக்கமுடியாத சில சக்திகள் - இந்த விளம்பரப் பலகைகளுக்கு எரியூட்டுதல், வர்ணம் பூசுதல், கிழித்து எறிதல் போன்ற அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவு 9 மணிக்குப் பின்னர் இந்த நடவடிக்கைகளில் இந்தக் குழுக்கள் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்கள் விரைந்து உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பொது மக்கள் தரப்பில் கூறப்படுகிறது.

# அச்சுவேலி பஸ் நிலையத்தில் நிலவும் பாரிய இட நெருக்கடி

(அச்சுவேலி)

அச்சுவேலி பஸ்நிலையப் பகுதியிலுள்ள நவீன சந்தைக் கடைகளுக்கு முன்பாகத் தனியார் சிற்றூர்திகள் தரிக்க விடப்படுவதால், இந்தப் பகுதியால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இதற்கு முன்பு இந்தச் சிற்றூர்திகள் - தனியார் காணி ஒன்றினுள் தரிக்க விடப்பட்டிருந்தது. கடந்த ஒரு மாதகாலமாக இவை பஸ்நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளில் தரித்து நிற்கின்றன.

இவ்வாறு சிற்றூர்திகள் நிறுத்தப்படுவதால், இந்தப் பகுதியில் கடைகளை வைத்திருக்கும், வியாபாரிகளுக்கும், வங்கி, பிரதேசசபை, அலுவலகம் என்பவற்றுக்குச் செல்வோருக்குப் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்தப் பகுதி வியாபாரிகள் அச்சுவேலி பிரதேச சபைக்கும், நீர்வேலியிலுள்ள பிரதேச சபைத் தலைமைக் காரியாலயத்துக்கும் அறிவித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

## மெலிஞ்சிமுனையில் —

# சமுர்த்தி திட்ட நிதியின் கீழ் புதிய பொதுச்சந்தை அமைப்பு

தீவுப்பகுதி - மெலிஞ்சிமுனை வாழ் மக்களின் நன்மைகருதி, பொதுச்சந்தையொன்று அமைக்கப்பட்டு, அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தித்திட்ட நிதி மூலமே இந்தச் சந்தை அமைக்கப்பட்டுள்ளது. இருந்தும் இந்தச் சந்தைக்கான பல வசதிகொண்ட தனிக்கட்டடம் அமைப்பதற்கு, ஊர்காவற்துறை பிரதேசசபை நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதி மக்கள் தமது பிரதான உணவாக மீனையே உண்டு வந்தநிலையில், இந்தச் சந்தை அமைக்கப்பட்டுள்ளதால் - மரக்கறி வகைகள், இலைவகைகள் போன்றவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

காய்கறி வகைகளை இவர்கள் வாங்குவதாயின் நீண்ட தூரம் சென்றுவரவேண்டு மெனவும், தற்போது இந்தச் சந்தை அமைக்கப்பட்டதால் - 250 குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (100)




சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு போரூட் சக்தி அமைப்பால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் உடுவில் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் - வலி. தெற்கு பிரதேச செயலரிடமிருந்து பரிசு பெறுவதைப் படத்தில் காணலாம். (101)

# இதழியல் டிப்ளோமா கற்கைநெறி நாளை ஆரம்பமாகவுள்ளது!

யுனெஸ்கோ அனுசரணையுடனும், டென்மார்க் அரசு நிதியுதவியுடனும் யாழ். பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் சார்பில் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களுக்காகத் திட்டமிடப்பட்டுள்ள இதழியல் டிப்ளோமா கற்கைநெறியை - நாளை சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் தொடக்கி வைப்பார். இந்த நிகழ்வில் இலங்கையின் மூத்த தமிழ்ப் பேரறிஞரான பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தொடக்கவுரை நிகழ்த்துவார்.

சிற்றிஹோலில் அமைந்துள்ள ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் - யாழ். பத்திரிகையாளர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சியை வழங்குதல், தேவையான வளங்களைத் தொகுத்து வழங்கல் போன்ற நோக்கங்களுடன் இயங்கி வருகிறது.

இதழியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான பாடத்திட்டங்கள்- நிபுணர்கள் துணையுடன் தயாரிக்கப்பட்டு, யாழ். பல்கலைக்கழக மூதவையின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் 09 தொடக்கம் 2006 மாச் வரை இந்த இதழியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான வகுப்புகள் நடைபெறும். பத்திரிகையாளர்களின் வசதிக்கேற்ப - சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் இந்த வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இந்தக் கற்கை நெறிக்கான வகுப்புக்களை நடாத்த கொழும்பில் இருந்தும், தென்னிந்தியாவில் இருந்தும் மூத்த பத்திரிகையாளர்களும், பத்திரிகைக் கல்வியாளர்களும் வரவழைக்கப்படவுள்ளனர்.

இந்த டிப்ளோமாவில் பயில்வதற்கென - வட இலங்கையைச் சேர்ந்த பத்திரிகைத் துறையோடு தொடர்புடைய 20 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கற்றுக்கொண்ட விடயங்களை கொழும்பு மற்றும் தென்னிந்திய நகரங்களில் இருந்து வெளியாகும் பத்திரிகை நிறுவனங்களில் நேரடியாகச் சென்று பயிற்சி பெறவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாணவர்களின் முயற்சியில் பயிற்சிப் பத்திரிகை ஒன்று வெளியிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நவீன இதழியலின் அனைதது விடயங்களையும் கற்றறியும் வாய்ப்பு இந்த மாணவர்களுக்குக் கிடைக்கும்.

இதில் பயிலும் மாணவர்களுக்கு பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மூத்த ஊடகவியலாளர்களும் பயற்சியளிக்க உள்ளனர்.

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்கத்தினரால் சாரணர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குகொள்ள விரும்புபவர்கள் மாவட்ட காரியாலய அலுவலகத்தால் விநியோகிக்கப்படும், விண்ணப்பப் போட்டோப் பிரதியைப் பெற்றுப் பூரணப்படுத்தி, அதனுடன் பயிற்சிக் கட்டணமாக 450 ரூபாவையும் சேர்த்து எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்பாக சாரணர் சங்க மாவட்ட ஆணையாளருக்கு அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பப் படிவங்களை நேரடியாகவும், அலுவலகத்திலும் கொடுத்துப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

தாமதமாக வந்துசேரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## 24 ஆவது சாரணர் பாசறை விழா

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தின் 24 ஆவது வருடாந்த சாரணர் பாசறை விழா நாளை தொடக்கம் 10 ஆம் திகதி வரை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கும் ஏனைய இரு நாட்களும் காலை 8 மணிமுதல் 5 மணிவரை இப் பாசறை இடம்பெறும்.

பார்வையாளரை ஞாயிற்றுக் கிழமை மட்டும் பார்வையிட அனுமதிக்கப்படும் என மாவட்ட ஆணையாளர் தெரிவித்தார். (72)

## சர்வோதய நீதிச்சேவை நடமாடும் சேவை

(ஏழாலை)

சர்வோதய நீதிச் சேவை மன்றம் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடமாடும் சேவையை ஏழாலைப் பகுதியில் நடாத்தவுள்ளது.

ஜே/202 ஏழாலை தென்மேற்கு, ஜே/203 ஏழாலை தெற்கு ஆகிய இரு கிராமசேவையாளர் பிரிவுகளிலுமுள்ள மக்களது தேவைகளைக் கருத்திறகொண்டே இந்தச் சேவையை வழங்கவுள்ளனர்.

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாசாலையில் இடம்பெறவுள்ள இந்த மக்கள் குறைசேவையில் இருபகுதி மக்களையும் கலந்துகொள்ளுமாறு கிராமசேவையாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (91)

## திறந்துவைக்கப்படாத பஸ் தரிப்பிடம்

(சுன்னாகம்)

சுன்னாகம் கந்தரோடை வீதியில் நாகேஸ்வரி வித்தியாசாலைக்கு அண்மையில் பஸ் தரிப்பிடம் அமைககப்பட்டு கடந்த ஒரு வருடத்துக்கு மேலாகியும் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படாதுள்ளது.

கந்தரோடையிலுள்ள பிரபல ஆங்கிலப் பாடசாலையில் உப அதிபராகக் கடமையாற்றிய ஒருவரின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்ட பஸ் தரிப்பிடம் நீண்ட நாட்களாகத் திரை நீக்கம் செய்து வைக்கப்படாதுளளது. (101)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : சொ.கம்சவேணி
முகவரி : சாவகச்சேரி, சங்கத்தானை.

ஏழாவது அகவையில்



பெயர் : கொ.ஜீன் சௌமியா
முகவரி : இளவாலை மேற்கு, இளவாலை.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்



# சமுதாயத்தில் பெண்கள்

## சிநேகிதியே

*(24.09.2004 இன் தொடர்ச்சி...)*

பெண்நிலைவாதம் பெண் விடுதலை என்ற நோக்கில் பல ஆய்வுகள், கருத்தரங்குகள், மாநாடுகள் என்பன நடைபெற்று வருகின்றன. பெண்நிலை வாதக் கருத்துக்களை ஆதரிப்பவர்களையும், அதேவேளையில் மறுப்பவர்களையும் காணமுடிகின்றது.

## எதிர்நோக்கும் பிரச்சினைகள்

பெண்விடுதலை, பெண்நிலைவாதம் என்ற கோட்பாடுகள் எமது சமூகத்துக்குத் தேவையற்றவை. பெண் அடக்குமுறை, ஆண் மேலாதிக்கம் ஆகியவை எமது சமூகத்தில் நிலவவில்லையெனக் குறிப்பிட்டும், பேசியும் வருவதை அவதானிக்கலாம். எமது சமூகத்தில் பெண்களின் கல்விநிலை முன்னேற்றகரமானது. பெண்கள் - ஆண்களுடன் சமமாகக் கல்வி பயில்கின்றார்கள். பொதுவாக நாட்டில் சில பகுதிகளில் ஆண்களைவிட அதிகளவு பெண்கள் கல்வி கற்கின்றனர். இருபதாம் நூற்றாண்டில் இருந்து பெண்களது கல்வி, வேலை வாய்ப்பு, சட்டரீதியான அந்தஸ்து என்பவற்றில் முன்னேற்றகரமான மாற்றம் ஏற்பட்டது. இதனை அளவுகோலாக வைத்துக் கொண்டு பெண்களுக்கு விடுதலை கிடைத்துவிட்டது என்று கூறவியலாது. பெண் உழைத்தாலும், பெரும் பதவிகள் வகித்தாலும் பெண் அடக்குமுறையில் மாற்றம் ஏற்படவில்லை. பெண் என்ற பால்பாகுபாடு அவளைப் பல்வேறு வகையில் கட்டுப்படுத்துகின்றது.

பெண் பற்றி சமூகம் கொண்டிருக்கும் கருத்து நிலையில், பெருமளவு மாற்றம் ஏற்படவில்லை. பெண்கள் ஆண்களுக்குக் கீழ்ப்படிவு உடையவர்களாகவும், ஆணைச் சார்ந்து வாழவேண்டியவர்களாகவும், சமூகத்தால் கருதப்படுகிறது. அரசியல் நிலைகளிலும், இலக்கிய மன்றங்களிலும், அறிவியல் நிறுவனங்களிலும் பெண்களுக்குக் கொடுக்கும் இடமும், அவர்களின் செயற்பாடும் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. ஆண், பெண் என்ற பாகுபாடும் பெண்ணானவள் ஆணுக்கு அடுத்தபடியாக உள்ளவள் என்ற சமூகத்தின் மனப்பதிவே இதற்குக் காரணமாக அமைகின்றது.

சில ஆண்கள், படித்த வேலைபார்க்கும் பெண்களைத் திருமணம் முடிக்க விரும்புகின்றனர். பொருளாதாரச் சிக்கல் காரணமாக இருவரும் வேலைக்குப் போக வேண்டும் எனக் கருதுகின்றனர். வீட்டு வேலை, அலுவலக வேலை எனப் பெண்களிடமே வேலைச் சுமை அதிகமாக இருக்கின்றது. குடும்பப் பொறுப்பு முழுவதையும் பெண்ணே கவனிக்கவேண்டும். சமையல், பிள்ளைகளின் கல்வி எனக் குடும்ப நிர்வாகத்தை நிர்வகிப்பது என்ற முழுச் சுமையையும் பெண்ணே தாங்கிக் கொள்கின்றாள். கணவன் - மனைவி என இருவரும் சேர்ந்து வீட்டுவேலை செய்தாலும், முழுச்சுமையையும் அவளே பொறுப்பேற்கின்றாள்.

படித்த இளம் பெண்ணை மணந்து கொண்ட இளைஞனும், பெண் தனக்கு அடங்கித் தன் விருப்பத்துக்கு இசைந்து நடக்கவேண்டியவள் என்றுதான் அவளைக் கருதுகின்றான். தன்னைப் போல அவளுக்கும் உரிமைகளைக் கொடுப்பதற்கு அவன் விரும்புவதில்லை. அவளின் பெற்றோரிடம் இருந்து பெற்ற சொத்து, பணம் என்பவற்றைத் தனக்கே உரியவை என்ற நோக்கத்தைக் கொண்டிருக்கின்றான். ஓர் இளைஞன் தான் வேலைசெய்யும் நிறுவனத்தில் பல பெண்களுடன் சிரித்து மகிழ்ந்து பழகுவான். ஆனால், தனது மனைவி தனது வேலை செய்யும் பணியகத்தில் இளைஞர்களுடன் கதைத்துப் பழகுவதைக் கண்டால், சீற்றம் அடைவான். சில ஆண்கள் பெண்கள் மீது சந்தேகம் கொள்வதால் பெண்களின் மனநிலை பாதிப்படைகின்றது. அதனால் குடும்பம் சிதைவடைகின்றது.

சில குடும்பங்களில் ஆண்கள் - பெண் படித்திருந்தபோதும், அவர்களை வேலைக்குப் போக அனுமதிப்பதில்லை. பொருளாதாரம் நிறைந்திருந்தால் வேலைக்குப் போகத்தேவையில்லையென எண்ணுகின்றனர். அதனால் படித்த பெண்ணின் கல்வி, ஆளுமை குடும்பத்தால் மழுங்கடிக்கப்படுகிறது. உயர் கல்விகற்ற-உயர் நிறுவனத்தில் வேலைபார்க்கும் பெண்கள் திருமணத்துக்காகத் தமது படிப்பையும், வேலையையும் விட்டுச் செல்கின்றனர். பெண்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு வசதியிருந்தாலும் ஆணைச் சார்ந்தே வாழ வேண்டும் என்பதைச் சமூகம் வேண்டுகின்றது. சமூக அழுத்தங்களால் பெண்களுக்கு மனத்தாங்கல்கள், மன அழுத்தங்கள் ஏற்படுகின்றன.



ஆண்களிடம் குற்றம், குறைகள் இருந்தபொழுதும், பெண் - குடும்பம் சிதைவுறக் கூடாது என்பதற்காகப் பொறுக்கின்றாள். குடும்பப் பொறுப்பை நினைத்துப் பல காரியங்களை விட்டுக்கொடுத்து வாழ்பவள் பெண். விட்டுக்கொடுப்பது பெண்ணின் கடமையென சமூகம் போதித்தது. குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் வேலை செய்பவர்களாக இருந்தால், பெண் - தனக்குக் கல்வி கற்பித்து வளர்த்த தாய் தந்தையருக்குத் தனது பணத்தில் ஒரு பகுதியைக் கொடுப்பதை ஆண்கள் விரும்புவதில்லை.

இதனால், பெண்களின் மனநிலை பாதிப்படைகின்றது. இதனால் குடும்பத்தினரிடையே பிரிவும் ஏற்பட வாய்ப்புண்டாகின்றது. பெண்களின் தாய், தந்தையர் வயது முதிர்ந்த காலத்தில் அவர்களைப் பாதுகாப்பதற்குப் பல ஆண்கள் மறுக்கின்றனர். இதனால்; பெண்களின் பெற்றோரும் மனம் நொந்தநிலையில் தமது முதுமைக் காலத்தைக் கழிக்கின்றனர். இதனால், கணவன் மனைவிக்கிடையில் கசப்புநிலை உண்டாகின்றது.

சமுதாய மரபுகள் மட்டுமல்ல, இயல்பான தன்மைகளும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வேறுபடுகின்றன. ஒருவனைத் தான் மனமார நேசித்துப் பழகிய ஒரு பெண், தன் வாழ்வே அவனுடன் என்று முழுமையாகத் தன்னை அவனுடன் இணைத்துக் கொள்பவள். அப்படிப்பட்டவள் அவனால் கைவிடப்படும்பொழுது மனமொடிந்து வாழ்விழந்து போகின்றாள்.

ஆண்களைவிடப் பெண்கள் கல்விகற்று பட்டம் பெற்று, தொழில் புரிந்தாலும் ஆண்மகன் கல்விகற்று வேலைவாய்ப்புக் கிடையாதபோதும் பெண் வரதட்சணை கொடுத்தே திருமணம் புரியவேண்டுமென சமூகத்தினர் எதிர்பார்க்கின்றனர். பெண்கள் கல்விகற்று வேலை செய்தாலும் அவர்களால் குடும்பத்தினருக்குச் சுமையாக இருக்கிறது என சமூகம் கருதுகின்றது. இதனால், பணம், சொத்து எல்லாவற்றையும் திரட்டி ஆடவனுக்குக் கொடுத்து, மணம் முடித்து வைக்கின்றனர். ஆண்கள்தான் பெண் பாரக்கப்போவது வழக்கமாகவுள்ளது. ஆணுக்குப் பெண் மேல் விருப்பம் இருந்தால் போதும் என சமூகம் கருதுகிறது. பெண்களின் மன விருப்பு வெறுப்புக்களைப் பெரிதுபடுத்துவதில்லை.

கணவன் வேலைக்குப் போவதும், மனைவி வீட்டில் இருந்து குடும்பத்தை நடத்துகின்ற பொழுதும், சில பிரச்சினைகள் எழுகின்றன. கணவனோடு வாழப் பிடிக்காவிட்டால் அவள் தாய் வீட்டுக்குப் புகலிடம் தேடிப் போகின்றாள். தாய் வீட்டிலே பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. வாழாமல் வந்துவிட்டாள் என்ற பழியும் சமூகம் அவள்மீது பார்க்கும் நோக்கும் பாரதூரமானவை.

குடும்பங்களின் வழிமுறையும் தந்தைக்குப்பின் மகன் என்றே அமைக்கப் பெற்று வழங்கி வருகின்றது. இன்றைக்கும் இன்னாருடைய மகனான இன்னார் என்று காட்டவே பெயருக்கு முன்னர் தந்தை பெயரையோ அல்லது அவர் பெயர் முன்னெழுத்தையோ குறித்து வருகின்றோம்.

தாயின் மீது பாசமும், பற்றும் இருந்தாலும் - தான் இன்னவளின் மகன் என்று எவரும் கூறுவதில்லை. ஒரு பெண்குழந்தையின் பெயர் திருமணத்துக்கு முன் தந்தை பெயரோடு சேர்த்தும், திருமணத்துக்குப் பின் கணவன் பெயரோடு சேர்த்தும் சொல்வதுதான் வழக்கமாக உள்ளது.

வீட்டுக்கு வருகின்ற மருமகள் - அடக்க ஒடுக்கத்துடன், பார்வைக்கு இலட்சணமாகவும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். வீட்டு வேலைகளை மனங்கோணாமல் செம்மையாகச் செய்யக்கூடியவளா எனவும், சிக்கனமாகக் குடும்பத்தை நடத்துகின்றாளா எனக் குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

படித்தபெண் என்றால், குடும்பப் பொறுப்பை நடத்தமாட்டாள் என்று சொல்லி ஒதுக்கி விடுகின்றனர். வேலைக்குச் சென்று திரும்பும் கணவனை அன்போடு வரவேற்று அவனுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்பவளாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். பெண்ணின் வேலைச்சுமை பற்றி எதுவித அக்கறையும் கொள்வதில்லை.

பெண்கள் கல்வி அறிவிலும், நிர்வாகத்தைக் கட்டியெழுப்புவதிலும், திறமைசாலிகளாக உள்ளபோதும் உயர்பதவிகள் பெரும்பாலும் ஆண்வர்க்கத்தினருக்கே சிபார்சு செய்யப்படுவதைக் காணலாம். இதனால், பெண்களின் ஆளுமை பாதிக்கப்படுகின்றது.

கிராமப் புறங்களில் பெண்கள் பலர் - நாள் வேலைக்குப் போகின்றனர். ஆண்களைவிடப் பெண்களுக்குக் குறைவான சம்பளமே கிடைக்கின்றது. அறுவடை செய்தல், பயிரிடுதல் போன்ற வேலைக்குச் சென்றால், ஆண்களுக்கு ஒருநாள் சம்பளம் 350 ரூபாவும், பெண்களுக்கு ஒருநாள் சம்பளம் 125 ரூபாவும் கொடுக்கப்படுகின்றது.

சில ஏழைப்பெண்கள் வீட்டு வேலைக்குச் செல்கின்றனர். அந்தப் பெண்களுக்கு சாப்பாடும், புடவைகளும், மாதச் சம்பளமும் கொடுக்கப்படும். இதனால், ஏழைகள் தமது வாழ்க்கைச் செலவைச் சமாளித்தால் போதும் எனக் கருதுகின்றனர். வேலை செய்யும் வீடுகளில் அவர்களுக்கு ஏற்படும் தொல்லைகள் பல. (தொடரும்....)

**கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்**

## மனதை மகிழ்ச்சியாக வைத்திருப்பது எப்படி?



முயற்சிகள் செய்து வந்த போதிலும் தோல்வியைத் தழுவிக் கொண்டிருப்போமானால், எமது நடைமுறைகளையும் நடவடிக்கைகளையும் மாற்றிக்கொள்ள முற்பட வேண்டுமே தவிர, விதியையோ மற்றவர்களையோ குற்றஞ் சாட்டிக் கொண்டிருக்கக் கூடாது. இத்தகைய சூழ்நிலைகளால் நிலை குலையாமல் இருந்திட அத்தியாவசியமானதொரு குணாதிசயம் புன்முறுவல் எனப்படும் புன்சிரிப்புத் தான்.

இன்றைய காலகட்டத்தில் மனிதர்களைக் குறிப்பாக பெண்களை பதற்றப்பட வைக்கக் கூடிய விடயங்கள் பல உள்ளன. படிப்பு சம்பந்தப்பட்டவையைத் தவிர தனிப்பட்ட விடயங்களிலெல்லாம்கூட, குழப்பம் விளைவிக்கத்தக்க பதற்றமான மனநிலை கொண்ட சமாச்சாரங்கள் பல உள்ளன. அவற்றினால் பாதிப்பு ஏற்பட நாமே வழி வகுத்துக் கொண்டால், பெரிய பிரச்சினைகளில் எம்மைக் கொண்டு சென்று தள்ளிவிட்டுவிடும், உடல்ரீதியாக மட்டுமல்ல, மனரீதியாகவும் தான். ஆகவே. மனதை கட்டுப்பாட்டினுள் கொண்டு சென்று பக்குவமாக வைத்துக்கொள்ள நாம் பழகிக் கொள்ள வேண்டும். அதற்கு முதற்படி மனதை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வது தான்.

மனித மனமென்பது, தூங்குகின்ற பயில்வான் போன்றது. சரியான முறையில் தட்டி எழுப்பி தயவு செய்யாவிடில், சக்தி பயனற்றதாகிவிடும். அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. இடம் கொடுக்காமலிருக்க மனதையும், உடலையும் பக்குவமாகப் பாதுகாத்திடவேண்டும். அதற்குண்டான ஒரே வழி மனதை மகிழ்ச்சியாகவும், முகத்தைப் புன்முறுவல் பூத்தபடியும் வைத்துக் கொள்வதேயாகும்.

திறமையும், சாமர்த்தியமும், தொழில்நுட்ப அறிவும் நிரம்பப் பெற்றவர்கள் கூட, கடமையின் சுமை காரணமாக மனம் நொந்து போவதுண்டு. அதைத் தவிர்க்க மனதை மட்டுமன்றி முகபாவனையையும்கூடத் திடமாக வைத்துக்கொள்ளப் பழகவேண்டும்

எந்தச் சூழ்நிலைகளிலும், எந்தக் காரணத்துக்காகவும் பொறுமையிழந்து, புன்னகையை விட்டு விடலாகாது.

நேரில் வந்து முகத்திற் அடித்தாற்போல ஏசினால் கூட, நிதானத்தை இழந்து விடலாகாது. நிதானம் இழந்தால், முகபாவம் மாறும், முகபாவனை மாறினால், முகம் புன்னகையைவிட்டு விகாரமானதோர் வடிவை வரவழைத்துக் கொள்ளும். எனவே, இவற்றையெல்லாம் தவிர்த்திடுவதற்கான ஒரே நல்லவழி எது நடந்தாலும், எது வந்தாலும், எது போனாலும் புன்னகை மாறாமல் முகத்தையும், அதன் மூலமாக மனத்தையும் நல்ல முறையில் வைத்திருப்பதுதான்.

நாம் நினைத்தது நிறைவேறாமல் போனால்கூட புன்னகை மாறாத பொலிவோடு காரண காரியங்களை ஆராய முற்படவேண்டுமே ஒழிய, துவண்டு போய்விடக்கூடாது. அத்தகைய ஒரு வழக்கத்தைப் பழக்கப்படுத்திக் கொள்வோமேயானால், வெற்றி நிச்சயம். ஆகவே, வாழ்க்கையில் வெற்றியடைய மாறாத புன்னகையுடன் காரியமாற்றுவதே சீரிய வழி. ☆

PUBLIC LIBRARY JAFFNA

# பிஞ்சுமுகத்தின் தேடல்

மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. இடியும், மின்னலும் கூடவே நின்று காதையும், கண்ணையும் தாக்கியது. ஒரே வெள்ளக்காடு. யாரோ தலையில் சாக்கைப் போட்டுக் கொண்டு வெள்ளத்துள் நடந்து கொண்டிருந்தார்கள். யாராக இருக்கும்? கொட்டுமழையில் ஏன்போகவேணும்? என் கண்களைத் திருப்பாமல், போகும் இந்த உருவத்தைப் பார்த்தேன். அது புள்ளியாகி மறையவே நான் யன்னலை விட்டு கட்டிலுக்கு வந்தேன். என் நிலையை யாரிடம் சொல்வது? இந்தக் கேள்வி கடந்த ஒரு வாரமாக என் உள்ளத்தில் எழுகிறது. அதை அடக்கினாலும் முடியவில்லை. மீண்டும் மீண்டும் தலைதூக்கியது. என் எண்ணக் குதிரையைத் தட்டினேன். அது என் மனத்தை ஏற்றிக் கொண்டு காற்றாய்ப் பறந்தது.

நான் இங்கே வந்து இரண்டு வருடங்களாகிவிட்டன. என்னுடைய அப்பாவும், அம்மாவும் என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்து விட்டுப் போய்விட்டார்களாம். எனக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. நானும் சொல்லவில்லை. ஆனால், எனக்கு நடை பழக்கும் தாதி என்னிடம் கேட்டு அறிய முயற்சிக்கிறா. அவவுடைய கேள்விகள் எல்லாம் அதை அறிய அவ முயற்சிப்பதைக் காட்டும். சிலவேளைகளில் நான் சோர்ந்து விடுவேன். ஒருவருடனும் கதைக்க மாட்டேன். எனது படுக்கையில் கிடப்பேன். சிலவேளைகளில் மெல்ல மெல்ல சுவரைப் பிடித்தபடி நடந்து திரிவேன். அப்படி ஒரு நாள் நடந்து மெல்ல அறையை விட்டு வெளியே வந்தேன். நடந்த தூரம் சற்றுக் கூடத்தான். கால்கள் நொந்தது. மெல்ல விறாந்தையில் இருந்த தூணோடு சாய்ந்து கொண்டேன்.

என் பார்வையில் சற்றுத் தூரத்தில் ஒரு மாட்டுக் கொட்டில். அங்கே ஒரு பெரிய வெள்ளைப் பசு. முன்னால் சின்னக் கன்று தூணில் கட்டியிருந்தது. தாய்ப்பசு அதை நக்கிக் கொண்டிருந்தது. கன்றும் முகத்தை ஆட்டியபடி நின்றது. அதன் கழுத்தில் கட்டிய சதங்கை ஒலி எழுப்பியபடி இருந்தது. நான் இப்போது எல்லாவற்றையும் கூர்மையாகக் பார்க்கப்பழகிவிட்டேன் இனிப்பை மெல்ல மெல்லச் சுவைப்பது போலக் காட்சிகளைக் கூர்மையாகப் பார்க்கிறேன். நான் ஓடியாடித்திரிந்த காலங்களில் என்னிடம் இந்தக் குணம் இருக்கவில்லை. இப்போது நடக்கமுடியாமல் போனபோது இந்தக் குணம் புதிதாக வந்து சேர்ந்து விட்டது.

இப்போ மாட்டுக் கொட்டிலுள் என் பார்வை படர்கிறது. ஒரு பையன் மெல்ல நடந்து வருகிறான். அவன் கால்களைப் பார்க்கின்றேன். இதுவும் என்னுடைய புதிய பழக்கம். யார் நடந்து வந்தாலும் அவர்களுடைய கால்களைப் பார்ப்பேன். இப்போது பையனின் கால்கள்...! இரண்டும் சற்று உள் வளைந்து குச்சிபோல்.... பாதம் சின்னதாய்... அவன் நடை....! மடிந்து... கால்கள் பின்னியபடி.... அந்தநடை...! அவன் அதைப்பற்றிக் கவலைப்படாமல் கையில் ஒரு செம்புடன் வந்தான். முகத்தில் மகிழ்ச்சி அப்பிக் கிடந்தது.



அவனைக் கண்டதும் பசு அம்..மா.. என்று அன்பாகக் குரல் கொடுத்தது. அவன் 'லச்சுமி!' என்று குரல் கொடுத்துக் கொண்டு வந்தான். பசு அவன் அருகே வந்ததும் அவன் முழங்காலை நக்கியது... அவன் அதன் முகத்தைப் பிடித்து அன்போடு வருடினான். இப்போ அவனுடைய அரைக் காற்சட்டையின் விளிம்பைப் பற்றியபடி கன்று நின்றது. அவன் செல்லமாக அதை அதட்டியபடி காற்சட்டையை விடுவித்துக் கொண்டு தாய்ப்பசுவின் மடியருகே போய்க் குந்தினான். செம்பிலே இருந்த தண்ணீரால் மடியைக் கழுவினான். செம்பைக் கால்களிடையே வைத்துக் கொண்டு பசுவின் முலைக் காம்பைப் பிடித்துப் பாலைக் கறக்கத் தொடங்கினான். பால் செம்பிலே வந்து விழும் ஓசை எனக்கு ஓட்டிலே மழைச்சரம் கொட்டுவது போலக் கேட்டது. பசுவோ அவன் தலையைத் திருப்பி நக்கியது. தன் கன்றை மறந்துவிட்டுதோ? அவன் அந்தப் பெரிய பசுவுக்குப் பக்கத்தில். அவன் சின்ன உருவம். அவன் கால்களைப் பார்த்தேன். குச்சிக்கால்கள்! ஆனால்... செம்பை நன்கு அணைத்திருந்தன. எனக்கு அவனுடைய செயல் ஒரு புதுப்பலம் தரவே மெல்ல எழும்பி சுவரைப் பற்றிபடி நடக்கத் தொடங்கினேன்...

இடையே அம்மாவின் நினைவு வந்தது. அவள் என் கால்களை வருடியபடி அழுவாள் என்ர குஞ்சு! எழும்பி நடக்கவேணும்! அவள் தழுதழுத்த குரலில் வேண்டுதல் செய்யும் போது எனக்கும் அழுகை வரும். என் கால்களை அவள் வருடும் போது எனக்கு உணர்வே இருக்காது. அப்பாவுக்கு என்னில் அக்கறை இல்லை. அவர் என்னைப் பார்க்கும் பார்வையில் ஒரு மிரட்டல்தான் தென்படும். அவருடைய நண்பர் சிலவேளை என்னைப் பார்க்க இங்கே வருவார். அவரையும் எனக்குப் பிடிக்காது. அவர் வந்தால் என் உடல் விறைக்கும். உள்ளம் இறுகிப் போய்விடும். அவர் கொண்டு வரும் பொருட்களை அவர் முன்னிலையிலே, தூக்கி வீசுவேன்! அவரை முறைத்துப் பார்ப்பேன்! இப்போது அவர் என்னைப் பார்க்கவருவதில்லை.

நேற்று வந்த கடிதம் என்னை உலுக்கியது. அம்மாதான் எழுதியிருந்தாள். அதில் இருந்தவரிகள்....! என்ர குஞ்சின்ரை கால்களைச் சுகமாக்கக் கனகாசுவேணும். நான் ஒரு வருஷம் சிங்கப்பூரிலை ஒரு பணிப்பெண் வேலை கிடைச்சு வாறகிழமை போகப் போறன்! அப்பா உன்ரை விசயத்திலை கவனம் எடுக்காததிலை நான் இந்த முடிவு எடுத்திட்டன். போக முந்தி உன்னைக் கட்டாயம் வந்து பார்ப்பன் 'கல்யாணி.. கல்யாணி.....! எழும்பு தாதிதான்' எழுப்பினாள் என் மனக்குதிரை சட்க்கென நின்றது.

எதிரே அம்மா! அவள் மெலிந்திருந்தாள். ஆனால், முக ஒப்பனையில் அழகாக இருந்தாள். என்ர குஞ்சு அருகில் வந்து என்னை அணைத்து முத்தமிட்டாள். அவளுடைய அணைப்பு அந்தத் தாய்ப் பசுவை எனக்கு நினைப்பு ஊட்ட, என் மனம் கரைய அம்மாவின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதேன். அம்மா என் முகத்தை நிமிர்த்தினாள் என் கண்ணீரைத் துடைத்தாள். அவள் கண்களிலும் கண்ணீர் அம்மா நீ அழாதே! என் வாய் சொன்னது. ஆனால், கண்கள் அம்மாவின் ஆடை மாற்றத்தையே ஊன்றிக் கவனித்தது. அம்மா சுரிதார் அணிந்திருந்தாள். ஓட்டுப்பொட்டு ஓ! அவள் கைகளுக்குப் பூச்சு எனக்குள் ஏதோ செய்தது.

நான் அம்மாவிடம் எதையும் இனிமேல் சொல்லப் போவதில்லை என முடிவு செய்தேன். அம்மாவின் கையில் புதிய கடிகாரம்.! நேரத்தைப் பார்த்தாள் நேரம் 5 மணியாப் போச்சு ! நான் போகவேணும். அங்கை மாமாவும் வாறார்! அவள் குரலில் ஒரு பதற்றம் சற்று முன்னின்ற அம்மாவாக இல்லாமல்... நான் தூரத்தே வரும் உருவத்தைப் பார்த்தேன். அப்பாவின் நண்பர்! என் உடல் இறுகத் தொடங்கியது. உள்ளம் விறைக்கத் தொடங்கியது. அம்மா என் காதருகே சொன்னாள் குஞ்சு! உவனை நான் என்ரை பாதுகாப்புக்காக் கூட்டித் திரியிறன். இப்ப உவனும் சிங்கப்பூர் வேலைக்குப் போறான். பிரச்சினை இல்லை. சொல்லிவிட்டு என்னை இறுக அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டாள். விரைவாக என்னைத் திரும்பிப் பாராமலே நடந்து போனாள். அம்மா! நீ எனக்காக.. என்ன செய்து விட்டாய்.... 'என் உள்ளம் இளகி ஓலமிட்டது. நான் கட்டிலைவிட்டு இறங்கி யன்னலருகில் நின்றேன் வெளியே ஸ்கூட்டரின் பின்னால் அம்மா, அப்பாவின் நண்பர் தோளில் கைபோட்டபடி இருந்தாள். அவள் என்னைத் திரும்பிப் பார்க்கவே இல்லை நான் திருப்பிக் கட்டிலைப் பார்த்தேன். அங்கே எங்கள் குடும்பப் படம் இருந்தது. மெல்லவந்து அதை எடுத்து நெஞ்சோடு அணைத்தேன். ☆

**மனோன்மணி சண்முகதாஸ்**

# குடும்பப் பிரச்சினைகள்...

# அளவிலும், தரத்திலும் வேறுபடுகின்றன



'வீட்டுக்கு வீடு வாசற்படி' என்று சொல்லுவார்கள். பிரச்சினைகள் இல்லாத குடும்பங்கள் இல்லை. குடும்பப் பிரச்சினைகள் - அளவிலும், தரத்திலும் தான் வேறுபடுகின்றன. சில குடும்பங்களில் பிரச்சினைகள் இலகுவானதாகவும், எளிதாகவும் சமாளிக்கப்படுகின்றன. சில குடும்பங்களில் பிரச்சினைகள் பெரிதாக முடிவடைகின்றன.

பெற்றோர்களும், குழந்தைகளும் அன்பால் மகிழ்ந்து வாழும் குடும்பங்கள் பலவுள்ளன. இதற்கு விதிவிலக்கான குடும்பங்களும் உண்டு. இவ்வாறான குடும்பங்கள் அன்பால் மகிழ்ந்து வாழ சில வழிகள்.

குடும்பத்தினர் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவேண்டும். 'ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தானே? எங்களுக்குத் தெரியாதா மற்றவர்களைப் பற்றி என்று நினைக்கக்கூடாது. ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி ஒன்றாக வாழும் குடும்பத்தினர் கூட, உணர்வால், உள்ளத்தால் ஒட்டிப் பழகாமல் விட்டால், மற்றவர்களைப்பற்றி அறிந்து கொள்ளமுடியாமல் போய்விடும். தங்கள் எண்ணங்களையும், குழந்தைகளின் எண்ணங்களையும், விருப்பு, வெறுப்புக்களையும் அவ்வப்போது பெற்றோர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். எதிர் விளைவுகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

எந்த உணவில் யாருக்கு விருப்பம். எந்த நிறம் யாருக்கு பிடிக்கும். எந்த விளையாட்டு யாருக்கு பிடிக்கும் என்பதெல்லாம் குடும்பத்திலுள்ள எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

குழந்தைகளின் குறிக்கோள்கள், உங்கள் நோக்கம் எதிர்பார்ப்புகள், பிள்ளைகளின் பயம், மகிழ்ச்சி இவற்றைப் பற்றியெல்லாம் எத்தனை நாட்கள் ஒன்றாக இணைந்து உட்கார்ந்து விவாதித்து இருப்பீர்கள். இதுபோன்ற விவாதங்களும், கருத்துப்பரிமாறல்களும் தான் குடும்பத்தில் நிலையான மகிழ்ச்சியை ஏற்படுத்த முடியும். அவர்களிடையே நெருக்கத்தை உண்டுபண்ண முடியும். இந்தப் பழக்கமில்லாத குடும்பங்களில் நெருக்கமோ, ஆழ்ந்த அன்போ ஏற்பட வாய்ப்பில்லை.

சில பெற்றோர்கள் தங்களுடைய துன்பங்களைப் பணக்கஷ்டங்களை, நோயைப் பிள்ளைகளிடம் கூறமாட்டார்கள். தாய், தந்தை இருவரும் வேலைக்குச் செல்பவர்களாக இருந்தால், தங்களை விட்டு பெற்றோர்கள் வெகுதூரம் போய் விட்டதாக குழந்தைகள் நினைக்கிறார்கள். இதற்குக் காரணம் பகல் பொழுது முழுவதும் பெற்றோர்கள் அவர்கள் அருகில் இல்லாமையே ஆகும்.

இதனால், பெற்றோர்கள் முடிந்தளவுக்கு குழந்தைகளைப் பணி செய்யும் அலுவலகத்துக்கு ஒரு நாளைக்காவது அழைத்துச் சென்று காட்டுவது நல்லது. அப்பொது தான் நீங்கள் எங்கு, என்ன வேலை செய்கின்றீர்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளுவார்கள். உங்களை பிரிந்திருக்கின்ற நேரங்களில் நீங்கள் அங்கு எப்படி வேலை செய்கின்றீர்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள்கள் பணியின் சிறப்பு, பணியாற்றும் முறை, எதிர்காலத்தைப் பற்றி குழந்தைகளிடத்தே கதையுங்கள். மனந்திறந்து கலந் துரையாடும்போது உங்களைப்பற்றிய ஒரு கண்ணோட்டம் அவர்கள் உள்ளங்களில் பதியும்.

உங்கள் வாழ்க்கை அவர்களுக்கு ஒரு பாடமாக அமையும். அத்துடன் தங்கள் வாழ்க்கையை குழந்தைகள் செம்மையாக உருவாக்கிக் கொள்ளவும் அது உதவும்.

உங்களுக்கும் குழந்தைகளுக்குமிடையே இடைவெளி வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். இதன் மூலம் தொழில் பார்க்கும் பெற்றோரின் குழந்தைகளின் தனிமை, உணர்வு போக்கப்படுகின்றது. ☆

# கால்நடை சிகிச்சை நிலைய திறப்பு விழா விசுவமடுவில் சிறப்புற நடைபெற்றது!

விசுவமடுப் பகுதியில் கால்நடை சிகிச்சை, தீவன விற்பனை நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதேச இணைப்பாளர் உதயகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை கண்டாவளை பிரதேச இணைப்பாளர் காசிநாதன், முன்னோடி கால்நடைப்பண்ணையாளர் இளங்கோவன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத்தேசியக் கொடியை விசுவமடு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் திலகன் ஏற்றிவைத்தார். பன்னிரு வேங்கையின் திருவுருவப் படத்துக்கு ஈகச்சுடரை வீரவேங்கை சிலம்பரிதியின் தாயார் இராசலட்சுமி, எல்லைப்படை மாவீரர் ஜெயா அவர்களின் துணைவியார் நிலா ஆகியோர் ஏற்றிவைத்தனர். திருவுருவப்படத்துககான மலர்மாலையை காசிநாதன், சகுந்தலா ஆகியோர் அணிவித்தனர்.

நிலையத்தின் பெயர்ப் பலகையை முத்தையன்கட்டுப் பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர் சண்முகராசா திரை நீக்கம் செய்து வைக்க, விசுவமடு பலநோக்கு கூட்டுறவுச்சங்க முகாமையாளர் சச்சிதானந்தன் நாடாவை வெட்டி நிலையத்தை திறந்து வைத்தார்.

பாடவிதான உத்தியோகத்தர் ஜெயராசா, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் பூங்குன்றன், காராளி சிணைப்படுத்தல் சேவை முகாமையாளர் மகாதேவன், துணுக்காய் பிரதேச கால்நடை வைத்தியர் கிரிஜகலா, கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் சூரியகுமார், பண்ணையாளர் இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து மாவட்ட செயலர் அமிர்தலிங்கம் நன்றியுரை நிகழ்த்தினார். (09)

## ஆங்கில ஆசிரியர் இல்லை

(மன்னார்)

மன்னார் - இலுப்பைக்கடவை பாடசாலை கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆங்கில பாட ஆசிரியர் இல்லாமல் இயங்கிவருகின்றது.

இந்தப் பாடசாலையில் நீண்ட காலமாக ஆங்கில ஆசிரியர் இல்லாததனால் மாணவர்கள் ஆங்கில பாடத்தில் சித்தியடைய முடியாத நிலை நிலவிவருகின்றது. இந்த விடயத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாடசாலை சமூகம் கேட்டுள்ளது.




## செட்டிக்குளம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் மகா வித்தியாலயம் ஆசிரியர் பற்றாக் குறையுடன் இயங்கிவருகிறது.

வவுனியா மாவட்டத்தின் செட்டிக்குளம். பிரதேசத்தில் முன்னணிப் பாடசாலையாக திகழ்ந்து வரும் இந்தப் பாடசாலையில், தொளாயிரத்து நாற்பத்து ஐந்து மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இந்தப் பாடசாலையில் 49 ஆசிரியர்கள் தேவையான நிலையில் 36 ஆசிரியர்களே கல்வி கற்பிக்கின்றனர். இதனால் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் இந்தப் பாடங்களை கற்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தாது உள்ளமை கவலைக்குரிய விடயமென பெற்றோர்கள் தெரிவித்தனர்.

## துணுக்காய் கல்வி வலயத்தில் ஆசிரியர்கள் கௌரவிப்பு!

(துணுக்காய்)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு துணுக்காய் கல்வி வலயத்தின் ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் மாலை மூன்று மணியளவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாங்குளம் மகா வித்தியாலயத்திற்கு அருகேயுள்ள வலயக்கல்விப் பணிமனையிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள், அதிபர்கள், துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள், ஆகியோர் மாலை அணிவித்து நிகழ்வு நடைபெற்ற பாடசாலை மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இதனையடுத்து தமிழீழ தேசியக் கொடியை முல்லை மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன் ஏற்றிவைத்தார்.

இதில் இந்த வருடம் ஓய்வு பெற்ற யோகபுரம், மகாவித்தியாலய ஆசிரியை ஈஸ்வரி பெரியதம்பி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இதனையடுத்து வருந்தினர் கௌரவிப்பு இடம் பெற்றது. பின்னர் மாங்குளம் மகாவித்தியாலய மாணவிகளின் கலை நிகழ்வுகளுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

## வவுனியாவில் இரு மருத்துவமனை புதிதாக திறந்து வைக்கப்படவுள்ளது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மருத்துவமனைகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

நிகொட் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வவுனியா புதுக்குளம், சிதம்பரபுரம் ஆகிய பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்ட இந்த மருத்துவமனைகள் அடுத்த மாத முற்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளன.

மேலும் கடந்தவாரம் வவுனியா நேரியகுளத்தில் அமைக்கப்பட்ட மத்திய மருந்தகம், மகப்பேற்று விடுதி, மாமடுப்பகுதியில் அமைக்கப்பட்ட பொது மருத்துவமனை என்பனவே திறந்துவைக்கப்பட்டவுள்ளன.

## யுவதிகளின் மீது இளைஞர்கள் சேட்டை வவுனியா குட்செற் வீதியில் அதிகரிப்பு!

(வவுனியா)

வவுனியா குட்செற் வீதியில் நிற்கும் இளைஞர்கள் அந்தப்பகுதியிலுள்ள மக்களுக்கு இடையூறு விளைவித்து வருகின்றனர்.

மாலை வேளையில் இந்த வீதியில் குழுக்களாக நிற்கும் இந்த இளைஞர்கள் வீதியால் செல்வோர் மீது சேட்டை புரிந்து வருகின்றனர்.

மாலை வேளையில் வகுப்புகளை முடிந்து வீடு செல்லும் பெண்கள் மீது இவர்கள் அடாவடித்தனமாக துஸ்பிரயோகமான வார்த்தைகளை பிரயோகித்து சேட்டை புரிவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதனால் இப்பாதையால் செல்வதற்கு பெண்கள் அச்சப்படுவதாகவும், இதன் காரணமாக அவர்கள் பல இடையூறுகளை சந்திப்பதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தப் பகுதியிலுள்ள கடை ஒன்றில் போதையை ஏற்படுத்தும் பல வகையான பொருட்கள் விற்பனை செய்யப்படுவதே இதற்கு முக்கிய காரணம் எனவும் தெரிவித்த பொதுமக்கள் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

## பற்சிகிச்சை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய தினங்களில் பற்சிகிச்சை நடைபெறும் என முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ அதிகாரி ஜீ. தர்மேந்திரா தெரிவித்தார்.

இந்த மருத்துவமனையில் இதுவரை வாரத்தில் இரு நாட்கள் மட்டுமே பற்சிகிச்சை நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

## இடம்பெயர்ந்து முல்லைத்தீவில் வசிப்போரின் அடையாள அட்டைகள் யாழ்.செயலகத்தில்!

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிப்போர், தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தமது பெயர் விபரங்களுடன் யாழ்ப்பாண செயலகத்துடன் தொடாபு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இடம்பெயர்வின் போது யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் பலர் இடம்பெயர்ந்து, முல்லைத்தீவு மாவடடத்தில் வசித்து வருகின்றனர்.

இதனால் பொதுமக்கள் முல்லைத்தீவு செயலகம் ஊடாக அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து இருந்தனர். தற்போது இவர்களுக்கான அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ள போதும், மக்கள் இவற்றைப் பெற்றுக் கொள்ளவில்லை என முல்லைத்தீவு அரச செயலகம் ஆட்பதிவுத் திணைக்கத்துக்கு தெரிவித்துள்ளது.

எனவே அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களை உடனடியாக யாழ்.அரச செயலக ஆட்பதிவுத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இவற்றைப் பெற்றுக் கொள்ளும்படி ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து அடையாள அட்டை வந்து சேர்ந்திருப்பவர்களின் பெயர்ப்பட்டியல் யாழ்.செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தில் உள்ளது.

இந்தப் பெயர்ப் பட்டியலைப் பார்வையிட்டு உரியவர்கள் உடனடியாக இதைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### நேர்முகத் தேர்வுக்கான நேரம், இடம் மாற்றம்

கிளிநொச்சி கிராமிய அபிவிருத்தி வங்கியால் இந்த மாதம் 6,7, 8 ஆம் திகதிகளில் நேர்முகத் தேர்வுக்காக அழைக்கப்பட்டவர்களுக்கான நேரம், இடம் என்பன மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

எனவே நேர்முகத் தேர்வுக்காக அழைக்கப்பட்ட அனைவரும் நாளை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை கிராமிய அபிவிருத்தி வங்கி, பிரதானசாலை, கிளிநொசசியிலுள்ள கிளையில் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### கலந்துரையாடல்

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் பொன்விழா பற்றி ஆராய்வதற்காக இன்று மாலை 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில், அதிபர் க.சந்திரராசா தலைமையில் கலந்துரையாடல் இடமபெறவுள்ளது.

இதில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடம் கேட்டுள்ளார். (9)

### தனியார் வீடொன்றில் இயங்கும் முன்பள்ளி

மன்னார் கோயிற்குளம் முன்பள்ளி தனியார் வீடொன்றில் இயங்கி வருகின்றது.

இந்த முன்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படாததால், மிக நீண்ட காலமாக தனியார் வீடொன்றில் பல சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

## கண்டாவளை மகாவித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்ற ஆசிரியர் தினம்

கண்டாவளை மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் தின நிகழ்வுகள் மிகச்சிறப்பாக இடம்பெற்றன.

உயர்தர மாணவர் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழ தேசியக் கொடியை வடமுனைத் தளபதி லெப்.கேணல் வீரமணி ஏற்றிவைத்தார். தொடர்ந்து சிறப்புரை, கருத்துரை என்பன இடம்பெற்றன

இதேவேளை பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கம் என்பனவற்றின் ஒழுங்குபடுத்தலின் கீழ் ஆசிரியர் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. மற்றும் மன்னார் பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் தின நிகழ்வுகள் வெகு சிறப்பாக இடம்பெற்றன.

## கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் 350 தொண்டர் ஆசிரியர்கள் மட்டுமே சேவையில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில 350இற்கு மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் சோவையாற்றி வருகின்றனர். இந்த பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை நீக்குவதற்காக 350 இற்கு மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு சேவையாற்றி வருகின்றனர். என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக ரூபா 1000 இற்கு குறைவான தொகையே வழங்கப்படுவதாகவும் இதனால் இவர்கள் தொடர்ந்து சேவையாற்ற முடியாதுள்ளதாகவும், இவர்களுடைய சேவை இடைநிறுத்தப்படும்போது மேலும் பெரும ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் என வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அபையரத்தினம் தெரிவித்துள்ளார்.





வவுனியாவில் அண்மையில் நடைபெற்ற சமாதான ஓட்ட ஆரம்ப நிகழ்வில் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வவுனியா அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மதகுருமார் ஆகியோரை இரண்டாவது படத்திலும் காணலாம். (03)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**
*உடையார்முன் இல்லார்போல் ஏக்குஅற்றும் கற்றார்*
*கடையரே கல்லாதவர்.*
திருக்குறள்

## நமது நோக்கு

### அவதூறு பேசும் தமிழக முதல்வரின் அம்பலமாக்கப்பட்டுள்ள சுயரூபம்!

இலங்கைக் கடற்பரப்பில் அதுவும் குறிப்பாக வட பகுதி கடற்பிராந்தியத்துக்குள், இந்திய மீனவர்கள் அதது மீறிப் பிரவேசித்து மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதும், அவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்படுவதும் - கண் மூடித்தனமான தாக்குதலுக்குள்ளாவதும், சிலவேளைகளில் படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியாவதும், இன்று நேற்று நடந்துள்ள விடயமல்ல.

கடந்த இரு தசாப்தகாலமாக இந்திய, குறிப்பாக் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அவலங்களுக்குள்ளாக்கப்படும் விடயம் ஒருதொடர்கதையாக நிகழ்ந்து வருவதை, இந்திய அரசும், தமிழகமக்களும் நன்குஅறிவர்.

இலங்கைக் கடற்படையினர் மனித நேயமற்ற தாக்குதல் நடவடிக்கைகளுக்கெதிராக, தமிழக கரையோரப் பிரதேசங்களில் வாழும் மீனவ சமூகத்தினர் ஆர்ப்பாட்டங்கள் - ஊர்வலங்கள் - உண்ணாவிரதப்போராட்டங்கள் எனப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த விவகாரத்தில் மத்திய, மாநில அரசுகள் அக்கறை காட்ட வேண்டுமென அறிவுறுத்தல் செய்ததுமுண்டு.

முன்னர் கருணாநிதி முதல்வராக இருந்த வேளையில், தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினரால் நிகழ்த்தப்படும் கொடுமைகள் தொடர்பாக தமிழக அரசு மத்திய அரசுக்கு உரியநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள்களை விடுத்ததுமுண்டு.

இலங்கை - இந்திய கடற்படை உயர் அதிகாரிகளின் சந்திப்பின்போதெல்லாம் இந்த விவகாரம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதும் நடந்தே உள்ளது. அப்போதெல்லாம் இலங்கை அதிகாரிகள் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இந்தியத் தரப்பினருக்கு உத்தரவாதம் கூறியதுமுண்டு.

இதனையும் மீறி நடைபெற்ற பல சம்பவங்கள் குறித்து இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் ஊடாக இந்தயா தனது ஆட்சேபத்தையும், கவலையையும் இலங்கை அரசுக்கு வெளிப்படுத்தியதுமுண்டு.

ஆனால், கடற்படையினரின் கீழ்நிலை அதிகாரிகள் இவற்றை அதிகளவில் கருத்தில்கொள்ளாமையை கவனமாகக் கடைப்பிடித்து வந்தனர் என்றே கூற வேண்டும். அதன் காரணமாக இடைவெளிவிட்டு, இடைவெளிவிட்டு தமிழக மீனவர் மீது கடற்படையினர் நடத்தும் தாக்குதல் மற்றும் கைது நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இதற்குத் தமிழக மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகளும் முக்கிய காரணமே ஆகும். வட பகுதி மீனவர்களின் கடல் உரிமையை நிராகரிக்கும் அவர்களது அத்துமீறல் - எமது தமிழ் மீனவர்களின் கடல் தொழிலுக்கு ஊறு விளைவிக்கும் வகையிலான அச்சுறுத்தலைக் கொண்டதென்பதும் உண்மையே.

அது குறித்து தமிழக மீனவர்கள் அக்கறை கொண்டதுமில்லை, தமிழக அரசோ இந்திய மத்திய அரசோ- ஏன் இந்தியக் கடற்படையோ கூட கண்காணிப்புக்களை மேற்கொண்டதுமில்லை.

ஈழத் தமிழ் மீனவர்கள் பாதிக்கப்படுவது குறித்து இலங்கைக் கடற்படையும் அக்கறை காட்டியதும் கிடையாது. பல வேளைகளில் இந்த விடயத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்ததும் உண்டு.

அதற்கான அரசியல் - இராணுவ ரீதியிலான உள் நோக்கமே வேறு. அதுவல்ல இப்போது பிரச்சினை.

விடுதலைப் புலிகள் மீதுள்ள பொறாமை உணர்வுடன் கூடிய வெறுப்பினை வெளிப்படுத்திவரும் தமிழக முதல்வரும் முன்னாள் திரைப்பட நடிகையுமாகிய ஜெயலலிதா அம்மையார் - தமிழக மீனவர்கள் விவகாரத்தையும் இந்த வகையில் கையாண்டு நடிக்க முயன்றுள்ளமையானது அம்பலமாக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்தால் கொல்லப்படுவீகளென தமிழக மீனவர்களை விடுதலைப் புலிகள் மிரட்டியுள்ளதாக ஜெயலலிதா அம்மையார் மத்திய அரசுக்கு புகார் செய்துள்ளதை- பொய்யானதும், உண்மைக்குப் புறம்பானதுமென இராமேஸ்வர மீனவர் சங்கத் தலைவர் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெளிவுபடுத்தியுள்ளார்.

சிறிலங்கா கடற்படையினரே தங்களிடம் புலிகளால் கொல்லப்படுவீர்கள் என மிரட்டியதாக தமிழக மீனவர்களும் தெரிவித்துள்ளனர். விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையே முறுகல் நிலையை ஏற்படுத்தவும், புலிகளுக்கும் தமிழக மக்களுக்கும் குறிப்பாக தமிழக மீனவர்களுக்கும் இடையேயான புரிந்துணர்வுடன் கூடிய உறவைச் சிதைக்கவும் ஜெயலலிதா மேற்கொண்ட சதியாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது.

தனது சுயநல அரசியல் அபிலாஷைகளுக்காக செல்வி ஜெயலலிதா இம்மாதிரியான பொய்யான புகார்களை விடுதலைப் புலிகளுக்கு எதிராக முன்வைப்பதன் மூலம் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினரின் தாக்குதல்களில் இருந்து காப்பாற்றிவிடலாமென முட்டாள் தனமாக நினைத்திருக்க மாட்டார் என்றே நம்புகிறோம்.

அப்படியாயின் பின் ஏன் இந்த அபத்தமான குற்றச்சாட்டை அவர் முன்வைக்க வேண்டும்? இந்தக் கேள்வியானது அவர் இலங்கைக் கடற்படையினருக்கு வக்காளத்து வாங்கும் முகவராக செயற்படுகிறாரோ என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தவே செய்கிறது.

## நாடும் நடப்பும்




### யாழ். விஞ்ஞான சங்கத்தின் ஏற்பாட்டில்

## மாணவ ஆய்வாளர் விருதுக்கான போட்டி நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் வருடாந்தம் நடத்தும் - "மாணவ ஆய்வாளர் விருது"க்கான போட்டி எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது எனச் சங்கத்தின் செயலாளர் ஜே.வி.ஜெயதேவன் அறிவித்துள்ளார்

இந்தப் போட்டியில் - க.பொ.த (உ/த) வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் பங்குபற்றலாம்.

இதில் - பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், கணிதவியல் போன்ற நான்கு துறைகளிலும் போடடிகள் தனித்தனியாக நடைபெறும். எனவே, ஒவ்வொரு போட்டியிலும் முதலாவது இடத்தைப் பெறுவோருக்கு பணப்பரிசுடன், வெற்றிக்கேடயமும், சான்றிதழும் வழங்கப்படும்.

இதில் திறமையாக ஆராய்ச்சி செய்த முதல் 20 மாணவர்களுக்கு சிறப்புச் சான்றிதழ்களும், ஆர்வமுடன் பங்குபற்றி, உரிய தராதரத்தைப் பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் - பங்குபற்றியமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இந்தப் போட்டியின்மூலம் மாணவர்களின் ஆராய்ச்சித் திறமை, அறிக்கை எழுதும் திறமை, வாய் மொழிமூலப் பரீட்சையை எதிர்கொள்ளும் திறமைகள் என்பவற்றுடன், பகுப்பாய்வு செய்து பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அதனை அணுகி, எதிர்கொளளும். திறமையையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

எனவே, எமது பிரதேசத்திலுளள உயர்வகுப்பு மாணவர்களை - இந்தப் போட்டியின் மூலம் இலங்கையின் ஏனைய பகுதி மாணவர்களுக்கு ஈடாக வைத்திருப்பதே எமது நோக்கமாகும் எனவும் இந்தச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். (100)

### மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் மீது தாக்குதல்

## பொலிஸ் உயரதிகாரிகள் விசாரணைக்கு அழைப்பு

யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் வைத்துத் தாக்கப்பட்டமை குறித்து விசாரணை நடத்தவென பொலிஸ்மா அதிபர் உட்பட பொலிஸ் உயர் அதிகாரிகள் பலர் கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட இணைப்பாளர் ருவான் சந்திரசேகர உட்பட மூவர் பொலிஸாரால் தாக்கப்பட்டனர். இது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகம், ஐ.நா.மனித உரிமைகள் அமைப்பு, இலங்கை பொலிஸ் ஆணைக்குழு, அரசியல் தலைமைப்பீடங்கள் உட்படப் பலருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைப்பீடம் உடனடியாகத் தனது விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது. இதனடிப்படையில் அடுத்தவாரம் முற்பகுதியில் பொலிஸ்மா அதிபர், யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வானகுரு, யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்படப் பலர் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விசாரணைகளைத் தொடர்ந்து - இது தொடர்பாக நீதிமன்ற முறைப்பாடும் தெரிவிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது என யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ப)

## செங்குந்தா பொதுச்சந்தை 15 ஆம் திகதி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

"நல்லூர் செங்குந்தா பொதுச்சந்தை" கட்டடத் திறப்புவிழா எதிர்வரம் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ளது, என யாழ்.மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

நல்லூர் - கல்வியங்காடு சந்தைக் காணிக்குள் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியே பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளது. இதனை யாழ்.மாவட்ட அரச அதிபர் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்.மாநகரசபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில், யாழ்.மாநகரசபையின் முன்னாள் முதல்வர்கள், ஆணையாளர்கள், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட அரசியற்துறையைச் சேர்ந்த போராளிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

முதலில் இந்தக் கட்டடமானது "கல்வியங்காடு பொதுச் சந்தை" என்றே பெயரிடப்பட்டிருந்தது என்றும், பின் அந்தப் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க "நல்லூர் செங்குந்தா பொதுச்சந்தை" எனப் பெயர் மாற்றியமைக்கப்பட்டுள்ளது ஏனவும், யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி குணராசா தெரிவித்தார்.

## மூடப்பட்ட நிலையிலுள்ள ஐயண்ணா சனசமூக நிலையம்

சுன்னாகம் கந்தரோடை வீதியிலுள்ள அறிஞர் ஐயண்ணா சனசமூக நிலைய நூலகம், கடந்த பல நாட்களாகப் பூட்டப்பட்ட நிலையிலுள்ளது. இதனால் மாணவர்களும், பொது மக்களும் தமது அறிவுத் தேடலை மேற்கொள்ளமுடியாது சிரமப்படுகின்றனர்.

இதுபற்றி இந்த நூலக நிர்வாகத்தினரிடம் கேட்டபோது, கடந்த ஒருவருடத்துக்கு மேலாக இங்கு வைக்கப்படும் பத்திரிகைகள் திருட்டுப்போவதாகவும், இதை நிறுத்தத்தாம் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதும் அவை பலனளிக்கவில்லை எனவும் தெரிவீத்தனர்.

ஆரம்பத்தில் கல்வியுடன் சம்பந்தப்பட்ட பக்கத்தை மட்டும் எடுத்துச் சென்றவர்கள், நாளடைவில் முழுப் பத்திரிகைகளையும் எடுத்துச் சென்றுவிடுவதாகவும் தெரிவித்தனர்.

வாசிப்பு வாரம் அனுஷ்டிக்கப்படும் இந்த நாட்களில் நூலகம் பூட்டப்பட்டிருப்பதால் பலரும் கவலையடைந்துள்ளனர். (101)

## காஞ்சிரங்குடாப் படுகொலை நினைவு நாள் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 2002ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10ம் திகதி நீதி கேட்டுப்போராடி காஞ்சிரங்குடாவில் மரணித்த தமிழீழ வீரமறவர்களின் 2 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், நினைவு கூரும் நாட்டுப்பற்றாளர் நிகழ்வும் இன்று காஞ்சிரங்குடா நாட்டுப்பற்றாளர் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில், நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், உடும்பன்குளக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலாகரன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் ஏனைய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல முக்கியஸ்தர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இவ்வார பலன்கள்
# 08-10-2004 15-10-2004

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | |
| யுரே | 09.இர 12.21 சிங். சந்<br>12 காலை 8.32 கன். சந் | | சந் சனி |
| நெப் | 12 பகல் 12.13 துல.புத<br>14 பகல் 1.42 துல. சந் | | சுக் |
| | | கேது | சூ. செவ் குரு. புத |

## மேடம்



*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் கணவன், மனைவியிடையே அன்னியோன்யம் தென்படும். குடும்ப நிலை பொதுவாக நன்றாக இருக்கும். உற்றார், உறவினர், நண்பர்களுடன் ஒற்றுமை கூடுதலாக இருக்கும். இல்லத்தில் சுப கருமங்கங்கள் நடைபெறும். பண வருவாய் திருப்தியளிக்கும். திருமணப் பேச்சுக்கள மகிழ்ச்சியான முடிவைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு உதவிகள் கிட்டும். பதவி உயர்வு தள்ளிப்போகும். வியாபாரிகளுக்கு தொழில் சிறப்பாக நடக்கும். தேங்கியிருக்கும் முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். முன்னேற்றம் உண்டு.

## இடபம்



*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இடபராசியில் ஜனனமானவர்களுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்கும். கருமங்கள் யாவும் நினைத்தவாறு எளிதாக நடக்கும். பண வருவாய் திருப்தியளிக்கும். நண்பர்கள், உறவினர்களுடன் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். பெரியோர்களின் உதவி உண்டு. திருமணம் போன்ற விடயங்கள் எண்ணியவாறு நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமடையும். ஆடம்பர பொருட்களை விற்பனை செய்வோர் கூடிய லாபமடைவர். மாணவர்கள் கல்வியில் கூடுதல் ஊக்கம் காட்டுவர்.

## மிதுனம்



*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம்பாதங்கள்)*

மிதுனராசியினருக்கு குதூகலமான வாழ்க்கையே அமையும். புத்திரர்களால் செலவுகள் ஏற்படும். அயலவர்களும் தொல்லை கொடுப்பர். பண வருவாய் குன்றும். எடுத்த கருமங்களில் தடை, தாமதம் ஏற்படும். தேக சுகமும் இடையிடையே பாதிப்படையும். திருமணப் பேச்சுக்கள் இழுபறியைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். அதிகாரிகள் கடும் போக்கைக் கடைப்பிடிப்பர். மோதல்களும் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் குறையும். விற்பனை குறையும். மாணவர்கள் கல்வியை புறக்கணித்து விளையாட்டுக்களில் ஆர்வம் கொள்வர்.

## கடகம்



*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

கடகராசிக்காரருக்கு குடும்பத்தில் நிம்மதி குறைவாக இருக்கும். புத்திரர்களால் உதவி கிடையாது. பிரயாணங்களில் பல சிரமங்கள் ஏற்படும். தேக சுகத்தைப் பேணவேண்டும். வருமானங்கள் கைக்கு வந்து சேர்வதில் தாமதம் காணும். திருமணப் பேச்சுக்கள் திருப்தி தராது. உத்தியோகத்தர்கள் - அதிகாரிகளின் விருப்புக்கேற்ப நடந்து கொள்ளல் நல்லது. ஊதிய உயர்வு தாமதப்படும். வியாபாரம் மந்த நிலையையே காட்டும். வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவது கடினம். கொடுத்த கடன்களை மீளப் பெறுவது கடினம். மாணவர்கள் மனச்சோர்வடைவார்கள். மனத்துணிவும், ஊக்கமும் தேவை.

## சிங்கம்



*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு இல்வாழ்க்கை சிறப்பாக அமையும். களத்திர வழியால் முன்னேற்றம் உண்டாகும். புத்திரர்களால் உதவி உண்டு. பொருளாதார நிலை திருப்தியாக இருக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். தொடங்கும் கருமங்கள் எளிதில் அனுகூலமாகும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் மேன்மை உண்டு. அரச உதவிகள் கிடைக்கும். பதவி உயர்வு நிலுவைப் பணங்கள் வந்துசேரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். வங்கி உதவிகள் கிட்டும். புதிதாக வாடிக்கையாளர்கள் வந்து சேருவர். மாணவர்களுக்கு முன்னேற்றமான காலம். புத்தி சாதுரியம் நன்றாக இருக்கும். பாராட்டுக்கள் கிட்டும்.

## கன்னி



*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதி பேணப்படும். புத்திரர்களால் உதவியும், நன்மையும் கிடைக்கும். கணவன் - மனைவியிடையே நல்லுறவு பேணப்படும். பொருள் நிலை பாதிப்பில்லை. தேகாரோக்கியமும் பிரச்சினை தராது. திருமணப் பேச்சுக்கள் சற்று காலதாமதமாகி நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு மன நிம்மதி உண்டாகும். எக்கருமத்தையும் மனத்துணிவுடன் நிறைவேற்ற வேண்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமடையும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். மாணவர்களின் கல்வி சிறப்படையும். புதிய துறைகளில் நட்டமுண்டாகும்.

## துலாம்



*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள் சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் )*

துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் பலவிதத்திலும் கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும். புத்திரர்களால் அதிக செலவினங்கள் ஏற்படும். பணிநிலை பாதிப்படையும். தேகாரோக்கியம் தொந்தரவுகளைக் கொடுக்கும். சிலருக்கு பொருள் இழப்புக்கள் ஏற்படலாம். திருமணப் பேச்சுக்கள் காலதாமதத்தைக் கொடுக்கும். உத்தியோகத்தர்களுக்கு சக தொழிலாளர்களுடன் பிரச்சினைகள் ஏற்படலாகும். சிலருக்கு இடமாற்றம் கிடைக்கும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் பலனளிக்காது. வியாபாரம் குறைந்த வருமானத்திலேயே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். ஆசிரியர்களுடன் உறவு பாதிக்கும்.

## விருச்சிகம்



*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

விருச்சிகராசியினருக்கு நன்மை, தீமை கலந்த பலன் நடக்கும். குடும்பத்தில் சிறு கருத்து வேற்றுமை இருந்தாலும் அவை சமாளிக்கப்படும். எடுக்கும் கருமங்கள் தாமதமாக நிறைவுபெறும். புத்திரர்களால் உதவி உண்டு. வெளிநாட்டிலிருந்து பண வருவாய் கிடைக்கும். பணநிலை அதிகம் பாதிக்காது. திருமணப் பேச்சுக்கள் மகிழ்ச்சிதரக் கூடியதாக அமையும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் சிறப்புற நடந்தாலும், நிம்மதி இருக்காது. சிலருக்கு பொறுப்புகள் மாற்றமடையலாம். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஓரளவு நன்றாக நடைபெறும். வங்கி உதவிகள் தாமதமடையும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் குறைவாக இருக்கும். முயற்சியுடன் முன்னேற்றத்தைக் கவனிக்கவும்.

## தனுசு



*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

தனுசு ராசிக்காரருக்கு குடும்ப வாழ்வு ஓரளவு நன்றாக இருப்பினும் இடையிடையே சச்சரவுகள் தோன்றும். புத்திரர்களால் நன்மை உண்டு. தொடங்கும் கருமங்கள் தாமதத்தைக் கொடுக்கும். தேகசுகம் இடையிடையே சிறு பாதிப்பைக் கொடுக்கும். வைத்தியச் செலவுகளும் தவீர்கக முடியாமலிருக்கும். பண வருவாய் சிறப்பாக இராது. திருமணப் பேச்சுக்கள் தாமதத்தையே காட்டும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் சிறப்பாக நடந்தாலும், பதவி உயர்வு தாமதமடையும். இடமாற்றங்கள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்தமாகவே நடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு புத்தி சாதூரியம் இருப்பினும் பரீட்சையில் பின்தங்கிக் காணப்படுவர்.

## மகரம்



*(உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்)*

மகர ராசிக்காரருக்கு வியாழசுகம் இருப்பதால், குடும்ப சுகம் சிறப்பாக அமையும். இனசனக் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். பண வருவாய் சிறப்பாக அமையும். வெளிநாடுகளிலிருந்து திடீர் பணவருவாய் கிடைக்கலாம். குடும்பப் பெண்கள் பலரது ஆதரவையும், அன்பையும் பெற்று மகிழ்ச்சியுடன் காணப்படுவர். மங்கள கருமங்களை நாடுவோர் மகிழ்ச்சியடைவர். உத்தியோகத்தர்கள் பலரது பாராட்டுக்களையும் பெறுவர். அதிகாரிகள் ஒத்துழைப்பர். ஊதிய உயர்வு கிடைக்க இடமுண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். நிறைந்த வருவாயை எதிர்பார்க்கலாம். பவுண் வியாபாரம் கூடிய லாபம் தரும். மாணவர்கள் கல்வியில் ஊக்கத்துடன் செயற்படுவர். உயர்கல்வி அனுகூலமுண்டு.

## கும்பம்



*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*

கும்பராசிக்காரர்களுக்கு குடும்பத்தல் பிரச்சினை ஏற்பட்டவண்ணம் இருக்கும். இனபந்துக்களுடன் கசப்புணர்வுகள் தோன்றும். பிரயாணங்களில் அலைச்சல் ஏற்படலாம். பணச்செலவு வருவாயிலும் பார்ககக் கூடுதலாக இருக்கும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். வெளிநாட்டு விவகாரங்களில் இழுபறி தோன்றும். மங்கள கருமங்கள் இழுபறி நிலையைத் தோற்றுவிக்கும். வீண் பிரச்சினைகளில் தலையிடாமல் இருப்பது நன்று. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். மேலதிகாரிகள் கடினமாக நடந்துகொள்வர். வர்த்தகர்களுக்கு குறைந்தபட்ச லாபமே கிடைக்கும். எதிலும் நிதானம் அவதானம் தேவை. மாணவர்கள் கடின முயற்சி எடுத்தல் வேண்டும்.

## மீனம்



*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கை சிறக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே புரிந்துணர்வு தெனபடும். பிள்ளைகள் பல வழியிலும் உதவுவார்கள். தொடங்கும் கருமங்கள் சிறப்பாக நடக்கும். பண வருவாய் திருப்தியாக இருக்கும். தேகசுகம் பாதிப்படையாது. வீட்டில் சுப கருமங்கள் நடைபெறலாம். திருமணப் பேச்சுக்கள் வெற்றி தரும். உத்தியோகத்தர்கள் சிறப்பாகப் பணியாற்றி பாராட்டுக்களைப் பெறுவர். ஊதிய உயர்வு கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பணவருவாய் நிறையும். புதிய முதலீடுகளைச் செய்யலாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவர். சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாணம் கைகூடும்.

# கூடிய இலாபம் தரும் பங்குச்சந்தை முதலீடு!

பொதுவாக நம்மிடையே காணப்படும் பழக்கமானது, வங்கிகளில் வைப்புச் செய்வதேயாகும். இதனைத் தவிர நாம் பங்குச் சந்தையிலும், எமது சொந்தத் தொழிலிலும் பணத்தை முதலிடலாம். எவ்வாறு பங்குகளில் முதலிடலாம் என்பது பலருக்குத் தெரிந்திருக்கும். ஆயினும், அவற்றில் காணப்படும் நன்மைகள், தீமைகள் பற்றிப் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனவே, நாம பங்குகளின் முதலீட்டு நன்மைகள் தீமைகளைப் பார்ப்பதற்கு முன் - பொதுவாக பங்கு வகைகளைப் பற்றி அறிவது அவசியமானது. எனவே, நாம் பங்குகளைப் பின்வருமாறு இரண்டு வகைகளுக்குள் உள்ளடக்கலாம்.

1. சாதாரண பங்கு 2. முன்னுரிமைப் பங்கு

### சாதாரண பங்கு

இந்தப் பங்குகளின் உரிமையாளர்கள் குறிப்பிட்ட பொதுக் கம்பனியில் உரிமையுடன் காணப்படுவர். இவர்கள் உரிமையுடன் காணப்படுவது போலவே, இவர்கள் நட்ட அச்சத்தையும ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு நட்டம் ஏற்படும் போது, இவர்கள் தமது பணத்தைக் கம்பனியின் அனைத்துப் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கப்பட்டபின்பே - உள்ள மீதித் தொகையால் தீரக்கப்படும். இவ்வாறு பங்குதாரர்கள் கம்பனிக் கூட்டத்தில் வாக்குரிமையுடன் காணப்படுகின்றனர். அத்துடன், இவற்றுக்குக் குறிப்பிட்ட வீத இலாபம் வழங்கப்படுவதில்லை. மாறாகக் கம்பனி இலாபம் உழைக்கும் ஆண்டில் குறிப்பிட்ட இலாப வீதம் ஒதுக்கப்பட்டு, பிரித்துக் கொடுக்கப்படும்.

### முன்னுரிமைப் பங்கு (Preference Shares)

இந்தப் பங்குதாரருக்குரிய பங்கிலாப வீதமானது - முன்பே குறிக்கப்பட்டு பங்குகள் வழங்கப்படுமாயின், அத்தகைய பங்குகள் முன்னுரிமைப் பங்கு என அழைக்கப்படும். இவர்கள் விசேட சந்தர்ப்பத்தைத் தவிர, வேறு நேரங்களில தமது வாக்குரிமையைப் பயன்படுத்த முடியாது. இவர்களுக்குக் குறிப்பிட்ட காலத்துக்குமுன் குறிக்கப்பட்ட பங்கிலாப வீதத்தின்படி பங்கிலாபம் வழங்கப்படும்.

இந்தப் பங்குகளுக்குப் பெயரளவு பெறுமானம் ஒன்று காணப்படுகின்றது. அது இலங்கையில் பத்து ரூபாவாகக் காணப்படுகின்றது. எனினும், சில நிறுவனங்களின் பெயரளவுப் பெறுமானமானது குறைவாகவே காணப்படுகின்றது. (உதாரணம்)

சிலோன் கூப்ட் ஸ்ரோர்ஸ் 8/- பெயரளவுப் பெறுமானம்.

வணிக இன்கோபரேஷன் 10/- பெயரளவுப் பெறுமானம்.

(இலங்கைப் பிணைகள் சந்தை 2000)

### பங்குகளின் முதலீட்டால் கிடைக்கக்கூடிய நன்மைகள்.

பொதுவாக சில ஆபத்துக்களை எதிர்நோக்கியே பொதுமக்கள் பங்குகளில் முதலிடுகின்றனர. ஏனெனில், இவர்கள் சந்தை பங்குகளில் முதலீடுகளை இழக்கவேண்டி ஏற்படும். இவ்வாறு ஆபத்துக்கள் காணபபடும். பங்குகளில் - அதிக இலாபம் பெறப்படுமாயின், அதனை மக்கள் விரும்புவர் எனக் கருதலாம். இதன் அடிப்படையில் இவர்களுக்கு வழங்கப்படும் பங்குலாபத்துக்கு மேலதிகமாக சில இலாபங்களையும இவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதாகக் காணப்படுகின்றது. அதன்படி -

1. பங்கிலாபம் 2. மூலதன இலாபம்
இவை இரண்டுமே பிரதான இலாபங்களாகும்.
3. உபகார வழங்கல் 4. உரித்து வழங்கல்
5. சாதாரண பங்காளர் வாக்களிக்கும் உரிமை

### பங்கிலாபம்

பங்குதாரரால் மேற்கொள்ளப்பட்ட பங்கு முதலீட்டுக்குக் குறிப்பிட்ட காலப் பகுதிக்கு ஒருதடவை பங்கிலாபமானது அவர்களது முதலீட்டின் சதவீதமாக வழங்கப்படுகிறது. இத்தகைய பங்கிலாபம் வழங்கலானது - கம்பனிக்குக் கம்பனி வேறுபடும். சில கம்பனிகள் ஆண்டு முடிவிலும், சில கம்பனிகள் அரையாண்டு, காலாண்டு அடிப்படையிலும் பங்கிலாபங்களை வழங்குவதுண்டு. இவ்வாறு வழங்கப்படும் பங்கிலாபமானது, பங்குகளின் முகப் பெறுமதியின் குறிப்பிட்ட சதவீதமாகக் காணப்படுமேதவிர, பங்குகளின் சந்தைப் பெறுமதியின் சதவீதமாகக் காணப்படமாட்டாது.

உதாரணமாக x என்னும் நபர் y என்னும் கம்பனியில் 10,000/= பெயரளவுப் பெறுமதியுடைய 1000 பங்குகளைக் கொண்டுள்ளார் (ஒரு பங்கின் பெயரளவுப் பெறுமதி 10/=) இந்த 1000 பங்குகளினதும் தற்போதைய சந்தைப் பெறுமதி ரூ 15,000/= y கம்பனியானது தனது வாடிக்கையாளருக்கு 20 சதவீதத்தைப் பங்கிலாபமாக வழங்கத் தீர்மானித்துள்ளது. எனவே,

$$10,000 \text{ X } \frac{20}{100}$$

ரூ 2000.00/= பங்கிலாபமாகப் பெறப்படும்.

### 2.மூலதன இலாபம்

இந்த இலாபமானது பங்குக் கொள்வனவு விலையிலும் பார்க்க பங்கு விற்பனை விலை அதிகமாகக் காணப்படும்போது, பங்குகளின் விற்பனையால் ஏற்படும் இலாபமாகும். இது பங்கு உரிமையாளனால் மேறகொள்ளும் முடிவிலேயே தங்கியுள்ளது. பங்கு உடைமையாளர் அவசர தேவையின் பொருட்டு பங்குகளை விற்பனை செய்வாராயின், அப்போது சிலவேளை கொள்விலையிலும் பார்க்க விற்பனை விலை குறைவாகக் காணப்படின், இவர் மூலதன நட்டத்தையே அடைந்து கொள்வர். மாறாகப் பங்கின் விற்பனை விலை உயரும்போது, கொள்விலையிலும் பார்க்க விற்பனை செய்து மூலதன இலாபத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். மூலதன இலாபமானது பின்வரும் சமன்பாட்டின் மூலம் கொள் விலையின் சதவீதமாகக் கணிப்பிடலாம்.

$$\text{மூலதன இலாபம்} = \left\{ \frac{\text{விற்பனைவிலை -கொள்விலை}}{\text{கொள்விலை}} \right\} \text{X100}$$

உதாரணமாக: x எனும் நபர் தன்னிடமுள்ள z கம்பனிப் பங்குகளை விற்பனை செய்யமுடிவு செய்கின்றார். இவர் பங்கை ரூ 30/= வுக்கு வாங்கியுள்ளார். தற்போது சந்தையில் இந்தப் பங்கின் விலை ரூ 40/= ஆகும். எனவே,

$$\text{மூலதன இலாபம்} = \left\{ \frac{40 - 30}{30} \right\} \text{X } 100 = \mathbf{33.33\%}$$

அதாவது இவர் ரூ 40/= விற்பனை செய்வாராயின், 33.33 /= விற்பனை இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### 3. உபகாரப் பங்கு வழங்கல்

இது பங்கிலாபம், மூலதன இலாபம் போன்ற பிரதான நன்மைகளாகக் கூறமுடியாது. சிலவேளைகளில் கம்பனிகள் தமது பங்குதாரர்களுக்கு இலவசமாகப் பங்கு வழங்கலையே உபகாரப் பங்கு வழங்கல் எனக் கூறப்படுகிறது. இதனை விரும்பினால் பங்குச் சந்தையில் விற்பனை செய்து காசாக மாற்றிக் கொள்ளலாம்.

### 4.உரிமைப் பங்கு வழங்கல்

இது - கம்பனியானது தனது தற்போதைய பங்குதாரர்களுக்குக் கம்பனியூால் வழங்கப்படும் பங்குகளாகும். இந்தப் பங்கு வழங்கல்கள் சந்தை விலையிலும் குறைவாகவே வழங்கப்படுவது வழமை. எனினும், சிலவேளைகளில் அவை சந்தைப் பெறுமதியிலும் கூடிய விலைக்கு வழங்கப்படுவது முண்டு. ஒரு நபர் பங்குகளைக் கொள்வனவு செய்து தனக்குப் பங்கிலாபம் மூலதன லாபத்துடன் வேறு சில நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். அதேவேளை, அவர்கள் ஆபத்துக்களையும் எதிர்கொள்ள வேண்டும். எனவே பங்கு முதலட்டாளர் பங்குகளை முதலிடும்போது, பங்குகளின் தற்போதைய விலை, எதிர்காலச் சந்தைவிலை, பங்கு கொளவனவால் ஏற்படும் நன்மைகள், பங்கிலாபப் பங்கொன்றின் உழைப்பு வீதம் போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு முதலீட்டைச் செய்வதன் மூலம், நட்டத்தைக் குறைத்துக் கொள்ளலாம் அல்லது தவிர்த்துக் கொள்வதுடன், இலாபமும் அடைய முடியும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

- உ.பிரசன்னன்

## இஸ்ரேல் படையினர் தாக்குதல்; காஸாவில் இரு சிறுவர் உயிரிழப்பு


(காஸா)

காஸா பிரதேசத்திலுள்ள ஜபாலியா அகதிமுகாம் பகுதியில் இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு பலஸ்தீன சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலிய இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல்கள் ஜபாலியா இராணுவமுகாம் பகுதியில் வீழ்ந்து வெடித்ததிலேயே சிறுவர்கள் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆனால், தம்மீது தாக்குதல் நடத்துவதற்கு முயற்சித்த தீவிரவாதிகள் மீதே தாம் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் படையினர் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர்கள் இருவரும் பலஸ்தீன தீவிரவாதிகள் என இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளதை மறுத்துள்ள மருத்துவர்கள், கொல்லப்பட்டவர்கள் இருவரும் 14,12 வயதுடைய சிறுவர்கள் எனத் தெரிவித்தனர்.

காஸா பகுதியில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் முகமாக கடந்த எட்டு நாட்களாக இஸ்ரேலிய இராணுவத்தினர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இந்த இராணுவ நடவடிக்கை காரணமாக இதுவரையில் 80 பலஸ்தீனர்களும், 5 இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, காஸா பிரதேசத்தில் உள்ள இஸ்ரேலிய படைகளை வாபஸ் பெறப்போவதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கினிபிஸோ இராணுவத்தளபதி படையினரால் சுட்டுக்கொலை!



ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கினிபிஸோவின் இராணுவத்தளபதி ஜெனரல் லெரிசிமியோ கொரியே சிபிரி அந்நாட்டு இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இராணுவத்தினருக்கு வழங்கப்படவேண்டிய சம்பளம் தொடர்பான முரண்பாடுகள் காரணமாகவே இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா சபையின் அமைதி காக்கும் படையில் லைபீரியாவில் கடமையாற்றியதற்கான சம்பளம் வழங்கப்படாமையினால் இராணுத்தினருக்கும் தலைமைத்துவத்திற்கும் இடையில் முரண்பாடுகள் நிலவிவந்தன.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையில் பணியாற்றுவதற்காக கினிபிஸோ இராணுவத்தினர் லைபீரியாவிற்கு அனுப்பப்பட்டனர். ஆனால் ஐந்து மாதங்களாக அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை.

இதனையடுத்து இராணுவத் தலைமையகத்திற்கும் - இராணுவ வீரர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் நிலவிவந்தன.

இந்த முரண்படுகளைத் தீர்க்கும் முகமாக நேற்று இராணுவ தலைமை அதிகாரிகளுக்கும், இராணுவ வீரர்களுக்கும் இடையே 7 மணித்தியாலங்கள் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இந்தப் பேச்சுக்கள் தோல்வியடைந்த பின்னரே இராணுவத்தளபதி கினிபிஸோவின் தலைநகர் பிஸ்ஸௌவில் உள்ள விமானநிலையம் ஒன்றிற்கு அருகாமையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவரைச் சுட்டுக்கொன்ற படையினர் இராணுவத்தளபதி சம்பளப் பணத்தைக் கையாடியதாகத் தெரிவித்துள்ளனர்.



ஆனால், இராணுவத்தளபதிக்கும் லைபீரிய நாட்டிற்கு இராணுவ வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டமைக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், இராணுவத்தளபதி கொரியேசிரிபி கொலை செய்யப்பட்டமையானது திட்டமிடப்பட்ட சதி என்றும், கினிபிஸோவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகவே இக்கொலை இடம்பெற்றுள்ளதாக போர்த்துக்கல் தெரிவித்துள்ளது.

கினிபிஸோ போர்த்துக்கலின் குடியேற்ற நாடாக முன்னர் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் முல்தான் நகரில் இரு தற்கொலைத் தாக்குதல்

### 40 பேர் பலி, நூறுக்கும் மேல் காயம்


(கராச்சி)

பாகிஸ்தான் - முல்தான் நகரில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 40 பேர் கொல்லப்பட்டதுடன், நூறுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

கடந்த வருடம் பாகிஸ்தானிய இராணுவத்தினரால் கொல்லப்பட்ட சுனி முஸ்லிம் தீவிரவாதிகளின் தலைவர்களுள் ஒருவரான அசாம் தாரிக்கினது நினைவுதின நிகழ்வுகளில் கலந்துகொண்ட பொதுமக்கள் மீதே இந்தத் தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டோர் நிகழ்வுகள் முடிவடைந்து கார் தரிப்பிடத்தை நோக்கி கூட்டமாகச் சென்றுகொண்டிருந்தபோதே கார் ஒன்றில் வந்த தற்கொலைக் குண்டுதாரி தாக்குதலை மேற்கொணடார்.

இந்தத் தாக்குதல் இடம்பெற்று ஒரு சில நிமிடங்களில் மோட்டார் சைக்கிளில் வந்த இன்னொரு தற்கொலைக் குண்டுதாரி தாக்குதலை மேற்கொண்டார்.

தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஒருவரையொருவர் முண்டியடித்து ஓட முற்பட்டதால் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கியே பெரும்பாலானோர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் ஷியா முஸ்லிம் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டதாகவும், இத்தாக்குதலுக்கு தாம் பழிவாங்கப்போவதாகவும் சுனி முஸ்லிம் தீவிரவாதிகள் தெரிவித்தனர்.

தாக்குதலையடுத்து முல்தான் நகர வீதிகளில் பதற்றம் நிலவிவருவதாகவும், இராணுவ ரோந்து மற்றும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த முல்தான் நகர பொலிஸ் அதிகாரி - இந்தத் தாக்குதல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும், இது தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவித்தார்.



இச்சம்பவம் மனிதாபிமானமற்ற கொடூரமான தாக்குதல் என்றும், இது நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பாகிஸ்தான் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் சேகு ரசீட் தெரிவித்தார்.

கடந்த வாரம் ஷியா முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 36 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பாரசூட் வீரர்கள் சாகசம்



சீனாவின் தேசிய தினம் கடந்த சில நாட்களுக்கு முன் கொண்டாடப்பட்டது. இதன் ஒரு கட்டமாக சாகசப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. இவற்றுடன் சுற்றுலா வார விழாவையும் சீனா கொண்டாடி வருகிறது.

சுற்றுலா விழாவையொட்டி பாரசூட் வீரர்களின் சாசக நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 38 வீரர்கள் கலந்துகொண்டனர். சீனாவின் சார்பில் 6 வீரர்கள் பங்கேற்றனர்.

ஹொங்கொங் நகரின் உயரமான கட்டத்தின் உச்சியில் இருந்து சீன வீரர் ஒருவர் தேசியக் கொடியைப் பிடித்தபடி குதித்து அந்தரத்தில் பறந்த காட்சி.

## 5 ஆம் நூற்றாண்டு தங்கப்புதையல்



பல்கேரியாவின் சோபியா நகரிலிருந்து 200 கி.மீ தூரத்தில் உள்ள சிப்கா நகரில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பூமியை தோண்டிய போது பெரிய பெட்டிகள் புதைக்கப்பட்டிருந்தன.

இறந்தவர் களின் உடல்கள் அடங்கிய அந்தப் பெட்டியில் தங்கத்தில் செதுக்கப்பட்ட சிற்பங்களும் தங்க நாணயங்களும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த தங்கப் புதையல்கள் 5ஆம் நூற்றாண்டு காலத்தை சேர்ந்தவை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

அப்போது ரோமானியா, மசிடோனியா, துருக்கி, கிரீஸ், ஆகிய நாடுகளின் சில பகுதிகள் ஒன்றாக இணைந்திருந்தபோது திராசியான் என்ற இனத்தவர்கள் வசித்து வந்தனர் என்றும் அவர்களது புதையல் தான் இது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

## சாகசம் செய்யும் ஆடு - குரங்கு



சீனாவின் தேசிய தினம் கடந்த சில நாட்களுக்கு முன் கொண்டாடப்பட்டது. இதையொட்டி சீனாவின் பல்வேறு பகுதிகளிலும் ஆடல் - பாடல் கொண்டாட்டங்களுடன் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன.

ஒரு வாரம் அங்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

பீஜிங் நகரில் நடக்கும் ஒரு சர்க்கஸ் நிகழ்ச்சியில் ஒரு ஆடு கயிற்றில் நிற்க அதன் கொம்பு மீது ஒரு குரங்கு தலை கீழாக நின்று சாகசம் செய்யும் காட்சி அனைவரையும் கவர்ந்தது.

## கிரடிட் கார்ட் வடிவில் தற்காப்பு துப்பாக்கி


(வொஷிங்ரன்)

ஜேம்ஸ்பொண்ட் படங்களில் வித்தியாசமான துப்பாக்கிகளையும், ஆயுதங்களையும் கதாநாயகன் பயன்படுத்துவதுண்டு.

அமெரிக்காவின் மின்னியோபோலிஸ் பகுதியில் உள்ள ஒரு துப்பாக்கி தொழிற்சாலை வித்தியாசமான துப்பாக்கியை உருவாக்கியுள்ளது.

கிரடிட் கார்ட் அளவில் இருக்கும் இந்த துப்பாக்கியில் இரட்டைக் குழல்கள் இருக்கும். ஒவ்வொரு குழலும் 7 முறை சுடும், தற்காப்புக்காக பயன்படுத்தப்படும் இந்த துப்பாக்கி மூலம் மிக குறைந்த தூரத்தில் மட்டுமே சுடமுடியும். 100 டொலர் விலை உள்ள இந்தத் துப்பாக்கி மிகவும் எடைகுறைந்தது. அரை அங்குல கனமே இருக்கும் இதை தீப்பெட்டிபோல சட்டைப்பையினுள் வைத்துக்கொள்ளலாம்.

## உலக நோக்கு

### இரசாயனவியல் துறையில் 3 பேருக்கு நோபல் பரிசு!


(ஸ்ரொக்கொம்)

2004 ஆம் ஆண்டுக்கான இரசாயானவியல் துறைக்கான நோபல் பரிசு - இஸ்ரேலைச் சேர்ந்த பயோகெமிஸ்டுகள் அரோன் சிசான் ஓவர், ஆவ்ராம் ஹெர்ஷோக், அமெரிக்காவைச் சேர்ந்த இர்வின் ரோஸ் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

உடலிலுள்ள புரதச்சத்துக்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சிக்காக இந்த மூன்று பேருக்கு 2004 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு வழங்கப்டுவதாக நடுவர்கள் அறிவித்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தாமதம் காட்டுவதேன்?

## விளக்கம் கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் விரைவாக ஆரம்பிக்காமைக்கான காரணத்தை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் -

தேசிய சமாதான பேரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்களை நடைமுறையில் செய்து காட்டவேண்டும்.

ஐ.தே.க. முன்னர் ஆட்சியில் இருந்தபோது, வெளிப்படுத்திய கொள்கைகளையே இன்று ஜனாதிபதி தனது தேசிய சமாதானப் பேரவைக் கூட்டத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஒஸ்லோ மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரகடனத்தினடிப்படையில் சில தீர்வுகளை முன்னெடுக்க அன்று ரணில் விக்கிரமசிங்க முயற்சித்தார். அந்தத்தீர்வுக்கு தமிழீழ விடு தலைப் புலிகளும் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

ஜனாதிபதி ஒஸ்லோப் பேச்சுக்களை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முன்வர வேண்டும். இல்லையேல் ஜனாதிபதியால் பேச்சுவாத்தையை முன்னெடுக்கவே முடியாது என்றே அர்த்தமாகும்.

ஜனாதிபதி தனது உண்மையான கொள்கைகளையே தேசிய சமாதானப் பேரவைக் கூட்டத்தில் வெளிப்படுத்தியிருப்பாராக இருந்தால் சர்வதேசத்தின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யத்தக்க வகையில் பேச்சுவார்தைகள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வாழ்க்கைச் செலவு உயர்வு

## அரசாங்கத்தைக் கண்டித்து கொழும்பு-கண்டியில் பேரணி

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலும், கண்டியிலும் நேற்று ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

நேற்று பம்பலப்பிட்டிச் சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்களே கலந்துகொண்டனர்.

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவினால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் - அரசாங்கம் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினைக் கட்டுப்படுத்துவதோடு சம்பள உயர்வையும் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இதேசமயம் கண்டியிலும் இதே போன்றதொரு ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

# இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கு 20 ஆம் திகதி பயிற்சிகள் ஆரம்பமாகும்!

(கொழும்பு)

இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கான பயிற்சி இந்தமாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாகுமென பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

பட்டதாரிகளை அரசாங்க சேவையில் உள்ளீர்த்துக்கொள்வதற்கான திட்டத்தின்கீழ் தற்போது 41 ஆயிரம் பட்டதாரிகள் பயிற்சிக்குத் தெரிவாகியிருக்கின்றனர்.

இவர்களில் - 17 ஆயிரம் பேருக்கான பயிற்சி கடந்த மாதம் முதல் நடைபெற்று வருகின்றது. இரண்டாவது தொகுதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 24 ஆயிரம் பட்டதாரிகளுக்கான பயிற்சி எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதற்கான கடிதங்கள் அடுத்த வாரம் முதல் அனுப்பப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊர்காவற்துறையில் திரையரங்கு தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறைப் பகுதியில் ஈ.பி.டி.பிக்குச் சொந்தமான மினி திரையங்கு ஒன்று இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றைய தினம் அதிகாலை இடம்பெற்றது. ஊர்காவற்துறைப் பகுதியில் ஈ.பி.டி.பினரால் நடத்தப்பட்டுவந்த திரையரங்கை இனந்தெரியாத குழு ஒன்று தீக்கிரையாக்கிவிட்டுத் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது. (51)

## தேர்தலுக்கு ....

இந்தச் சட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பின்போது சபையைவிட்டு வெளியேறிவிட்டனர்.

இந்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் ஒரு வருடத்துக்குப்பின்பே அமுலுக்குவரும்.

அதற்கு முன்னதாக சகலருக்கும் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் நேற்று சபையில் அறிவிக்கப்பட்டது.

## வெலிக்கந்தை....

சென்று இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். பின்னர் இவரது சடலம் அப்பகுதி குளம் ஒன்றின் கரையில் கண்டு பிடித்து மீட்கப்பட்டது.

இது தொடர்பாக வெலிக்கந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலை....

பின்னிற்கவில்லை. அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம்.

திருமலையில் இராணுவ வெற்றிக்கெல்லாம் திருமலைத் துறைமுகமே பக்கபலமாக இருந்தது. எமது மக்களுடைய ஆதரவுடன் [illegible] தத் துறைமுகப் பகுதியை கைப்பற்ற முடியுமென அவர் மேலும் தெரி வித்தார். (04)

## வாக்களிப்புக்கு....

அடையாள அட்டை வழங்கப்பட்டு முடிந்த பின்னரே இது சாத்தியமாகும். அரசாங்கம் இந்த விடயத்தில் அவசரப்போக்கை கடைப் பிடிக்கிறது.

ஒரு வருடத்தினுள் அனைவருக்கும் அடையாள அட்டைகளை வழங்குவதாக அரசு கூறுகிறது. இது நிர்வாக ரீதியாகப் பல சிக்கல்களை ஏற்படுத்தும்.

இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம், தமிழ் பேசும் மக்களில் வாக்காளர்களின் எண்ணிக்கையைக்குறைப்பதும் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதி நிதித்துவத்தை குறைப்பதுமே ஆகும் என்றார்.

## புலிகளின் குழு....

தக் குழுவில் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், தமிழீழ மகளிர் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி, சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அதன் துணைப்பொறுபாளர் செல்வி ஆகியோரே இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இதேவேளை, தாயகத்திலிருந்து ஐரோப்பாவுக்கு சென்றிருக்கும் மனித உரிமைகள் அமைப்பினர் இரு நாட்கள் சுவிஸ் நாட்டில் தங்கிநின்று தமது செயற்பாடுகள் தொடர்பான சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

## பாக்கு நீரிணையில்....

படகு நேற்றுமுன் தினம் முதல் இராமேஸ்வரம் கடற்பகுதியில் ரோந்துப் பணியை தொடங்கியது.

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடைப்பட்ட பாக்ஜல சந்தி கடற்பகுதி மிகவும் ஆழம் குறைந்த கடற்பகுதியாக இருப்பதால், கடந்த காலங்களில் இங்குள்ள படையினர் சிறிய மரத்தாலான ரோந்துப் படகுகளை ரோந்துப் பணியில் ஈடுபடுத்தினர்.

இதனால் இலங்கையில் இருந்து அகதிகள் மற்றும் கடத்தற் பொருட்களை ஏற்றிவரும் அதி விரைவான பிளாஸ்டிக் படகுகளைத் துரத்திச் சென்று பிடிக்க முடியாத நிலை இருந்தது.

தற்போது இந்த சிறிய ரக விரைவு படகு ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால், புலிகளின் ஊடுருவல் மற்றும் கடத்தல் நடவடிக்கைகளை முற்றிலும் தடுக்க முடியும் என்று கொமாண்டர் முத்துக் கிருஷ்ணன் தெரிவித்தார்.

இது குறித்து இராமேஸ்வரம் பகுதி கடற்படைக் கொமாண்டர் உதய் மேனன் கூறியதாவது -

இராமேஸ்வரம் கடற்பகுதியில் ஏற்கனவே கடற்படைக்குச் சொந்தமான பெரிய கப்பலும் 4 ரோந்துப் படகுகளும் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. தற்போது புதிதாக வந்துள்ள இந்த அதிவிரைவு படகு மூலம் - மீற்றர் கடல் ஆழமுள்ள பகுதிகளிலும் கரையோரத்திலும் கண்காணிப்பு பலப்படுத்தப்படும். மீனவர்கள் இந்திய கடல் எல்லையை தாண்டிச் செல்லக் கூடாது.

தவறுதலாகச் செல்லும் மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினால் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் ராமேஸ்வரம் கடற்படை முகாமில் புகார் செய்யலாம்.

அதன் அடிப்படையில் இலங்கைக் கடற் படை அதிகாரிகளுடன் பேசி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கமுடியும் என்று தெரிவித்தார்.

**Compaq PIII கணனிகள் விற்பனைக்குண்டு**

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Compaq PIII கணனிகள் (Tower Model) 800MHz/550MHz, 128 Mb RAM, 10GB Hard Disk, CD ROM மல்டிமீடியா மற்றும் 17" Color Monitor உடன் அதிசயத்தக்க விலையில்விற்பனைக்குண்டு.

- புதிய P4 கணனிகள் மற்றும் புதிய பழைய உதிரிப் பாகங்கள் கொழும்பு விலையில்
- குறைந்த இருப்புக்களே கைவசம்
- ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்துங்கள்

தொடர்பு : 0776093477 / 0712509228

# கிளிநொச்சியில் நடைபெறும் மகளிர் படையணிகளின் கண்காட்சியிலிருந்து....



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.10.2004 அன்று பொன் னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.